සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம். ஏ. அபுதாஹிர்

முன்னோடி வினாத்தாள் 1

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2022

வினாத்தாள் I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்


பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க



LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
LEARN EASY
KNOWLEDGE IS POWER
zoom
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

1. பின்வரும் மூன்று உருக்களில் ஒன்றில் வேறுபாடு உள்ளது. அந்த உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

2. தரப்பட்டுள்ள உருக்களிடையே ஒத்த இரண்டு உருக்களைக் குறிக்கும் எழுத்துக்கள் உள்ள விடையினைத் தெரிவு செய்க.



A B C D E


(1) A உம் C உம் (2) B உம் E உம் (3) C உம் E உம்

3. இந்த உருவைச் சரியாகப் பூர்த்தி செய்ய எந்த உருத்துண்டை இணைக்க வேண்டும்?




(1) (2) (3)

4. பின்வரும் எண்சட்டங்களில் மிகப் பெரிய எண்ணைக் குறித்துக் காட்டுவது எது?



(1) (2) (3)

5. உருக்களில் காட்டப்பட்டுள்ள மூன்று சந்தர்ப்பங்களையும் ஒழுங்குமுறைப்படி காட்டும் விடை எது?



A B C

(1) C, A, B (2) C, B, A (3) B, A, C


www.ikedu.lk

சுட்டெண்: .....

6. எண்கள் இடப்பட்டுள்ள கோலத்திற்கேற்ப வெற்றுக் கட்டங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

103	28	98	31	93	34	-?-	-?-

(1) 98, 37 (2) 88, 39 (3) 88, 37


7.  உருவில் காணத்தக்க சதுரங்களின் எண்ணிக்கை யாது?


(1) 10
(2) 11
(3) 12


8. 34 உடன் 11 ஐக் கூட்டும் போது கிடைக்கும் எண் ✳ ● எனவும் 34 இல் இருந்து 11 ஐக் கழிக்கும் போது கிடைக்கும் எண் Ω # எனவும் காட்டப்பட்டது. இதன்படி, எண் 243 ஐக் காட்டும் விடை எது?

(1) Ω ✳ # (2) Ω ● # (3) # ✳ ●


9. ஒரே கூட்டத்தைச் சேர்ந்த உருக்கள் உள்ளடங்கும் அடைப்பைத் தெரிவு செய்க.



(1)



(2)



(3)

10. உருவில் வெற்றிடமாயுள்ள இடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.






(1)



(2)


(3)

11. கோலத்திற்கேற்ப வெற்றிடத்துக்குப் பொருத்தமான எண் யாது?








(1) 24 (2) 35 (3) 50


www.ikedu.lk

12. தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை X குறிப்பிடும் திசை வழியே பார்க்கும் போது அது தோன்றும் விதத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.




(1) (2) (3)

13. அடைப்புக்குள் உள்ள உரு நிரையில் அடுத்து இடம்பெற வேண்டிய உரு எது?




(1) (2) (3)

14. கீழே தரப்பட்ட நான்கு உருக்களில் ஒன்று ஏனைய உருக்களிலிருந்தும் வேறுபடுகிறது. வேறுபடும் உருவைத் தெரிவு செய்க.



(1) A (2) B (3) D

15. உரு A இல் காட்டப்பட்டுள்ள வடிவத்தைக் கொண்ட ஒரு தாள் முறிந்த கோடு வழியே மடிக்கப்பட்டு உரு B இல் காட்டப்பட்டுள்ள வடிவத்தைப் பெற்று அதில் காட்டப்பட்டுள்ள முறிந்த கோடுகள் வழியே வெட்டித் துண்டுகளாக்கப்பட்டது. கிடைத்த முக்கோணித் துண்டுகளின் எண்ணிக்கை யாது?



உரு A உரு B

(1) 2 (2) 3 (3) 4


www.ikedu.lk

16. ○○○ = △△△△ எனவும் △△ = □□□ எனவும் தரப்பட்டுள்ளது.

○○○○○○ = ...-?-..... வெற்றிடத்தில் வரவேண்டிய □கள் எத்தனை?

(1) 6 (2) 8 (3) 12

17. பின்வருவனவற்றுள் எந்த இரண்டு வடிவங்களை இணைப்பதனால் வட்டம் ஒன்றைப் பெற முடியும்?



(1) A,D (2) B,D (3) A,C

18.

1	6	3	4	5	2	7

இங்கு தரப்பட்டுள்ள ஏழு இலக்கங்களையும் இறங்குவரிசைக்கு ஒழுங்குபடுத்துவதற்காக எத்தனை இலக்கங்களின் இடங்களை மாற்றுதல் வேண்டும்?

(1) 3 (2) 4 (3) 5

19. கமல் விமலின் மகன். விமல் அமலின் தந்தை. இதன்படி கமலும் அமலும்,

(1) தந்தை - மகன் (2) பாட்டன் - பேரன் (3) அண்ணன் - தம்பி

20. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

சந்தை + வயல் ⟶ தையல் எனின், நாக்கு + விரல் ⟶ ..... ஆகும்.

(1) நான்கு (2) குயில் (3) குரல்

21. 'முயற்சி செய்தவர்கள் முன்னேறுவர்' என்னும் கூற்றை நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவு செய்க.

(1) முயற்சிப்போர் மட்டும் முன்னேறுவர்

(2) முயற்சிப்போருக்கு முன்னேற்றமுண்டு

(3) முன்னேறியோர் முயற்சிப்பர்

22. ரவியை விட ரகு, ஒரு வருடம் மூத்தவன். ரகுவை விட மது, இரண்டு வருடம் மூத்தவன். இம்மூவரினதும் வயதுகளின் கூட்டுத் தொகையாக இருக்கக்கூடியது பின்வருவனவற்றுள் எது?


(1) 12 வருடங்கள் (2) 16 வருடங்கள் (3) 20 வருடங்கள்

23. குறித்த இரண்டு எண்களுள் முதலாவதின் $\frac{1}{2}$ அல்லது இரண்டாவதின் $\frac{3}{4}$ இன் பெறுமதி 45 இற்குச் சமனாகும். அந்த இரண்டு எண்களினதும் கூட்டுத்தொகை எவ்வளவு?



(1) 60 (2) 90 (3) 150

www.kedu.lk

◆ அடைபில் உள்ள உருக்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு முழு எண் பெறுமானம் தரப்பட்டுள்ளது. அப்பெறுமானங்களின் கூட்டுத்தொகை நிரையாகவும், நிரலாகவும் தரப்பட்டுள்ளது.



24. வெற்றிடமாயுள்ள இரண்டு அடைப்புக்களிலும் வரவேண்டிய சரியான விடை

(1) 
(2) 
(3) 

25. -?- என்ற குறியினால் காட்டப்பட்ட இடத்தில் வரவேண்டிய எண்.

(1) 12 (2) 15 (3) 16

26. 1, 2, 3, 4, 5 ஆகியவற்றுக்கு முறையே A, B, C, D, E என்னும் எழுத்துக்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. இதற்கேற்ப,

```
  A B C
+ C A B
-------
.......
```

விடையாக அமைவது

(1) DCE
(2) CED
(3) ECD

27. இரு வெற்றுக் கட்டங்களுக்கும் பொருத்தமான இரு கணிதச் செய்கைகளையும் முறையே தெரிவு செய்க.

$$21 \square 7 = 10 \square 7$$

(1) −, + (2) +, × (3) ÷, −

28. உட்பக்கம் தெரியாத பெட்டி ஒன்றினுள் 3 சிவப்பு நிறப் பந்துகளும் 2 நீல நிறப் பந்துகளும் 1 வெள்ளை நிறப் பந்தும் இருந்தன. பந்துகளைப் பார்க்காமல் பெட்டியினுள் கையை விட்டு தடவைக்கு ஒரு பந்து வீதம் வெளியே எடுக்கப்பட்டது. அவ்வாறு எடுக்கப்படும் பந்துகளில் ஒன்று, சிவப்பு நிறமாக இருக்கும் என எத்தனையாவது தடவையில் உறுதியாகக் கூறமுடியும்?

(1) இரண்டாவது (2) மூன்றாவது (3) நான்காவது

29. பண்ணையொன்றிலிருந்த கோழிகளினதும் ஆடுகளினதும் எண்ணிக்கை 12 ஆகும். அவற்றின் கால்களின் எண்ணிக்கை 38 எனின், பண்ணையிலிருந்த ஆடுகள் எத்தனை?

(1) 5 (2) 6 (3) 7

www.lkedu.lk

30. சுவர்க்கடிகாரம் ஒன்று 6 மணிக்கு 6 மணிகளை அடிப்பதற்கு 5 செக்கன் நேரம் எடுக்கும். இக்கடிகாரம் 12 மணிக்கு 12 மணிகளை அடிப்பதற்கு எத்தனை செக்கன் நேரம் எடுக்கும்.

(1) 10 செக்கன் (2) 11 செக்கன் (3) 12 செக்கன்

31. சம்பவம் ஒன்றின் ஐந்து சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்கு வரிசையைக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

A - அது பெரிய மழையாகப் பெய்யத் தொடங்கியது.

B - சிறிது நேரத்தில் மழைத்துளிகள் விழ ஆரம்பித்தன.

C - ஒரு மணித்தியாலம் வரை ஓயாமல் மழை பெய்தது.

D - பின்னர் மழை மெல்ல மெல்ல ஓயத் தொடங்கியது.


E - கருமேகங்கள் வானைச் சூழ்ந்து கொண்டன.


(1) EBACD (2) EBCAD (3) CBAED

32. நான் 70 ரூபாயைக் கொடுத்து 1 மாம்பழத்தையும் 2 கொய்யாப்பழங்களையும் வாங்கினேன். மாம்பழம் ஒன்றின் விலை கொய்யாப்பழம் ஒன்றின் விலையிலும் 10 ரூபாய் அதிகமாகும் எனில், கொய்யாப்பழம் ஒன்றின் விலை யாது?

(1) 15 ரூபாய் (2) 20 ரூபாய் (3) 30 ரூபாய்

33. அடைப்புக்குள் இருக்கும் இரு கோலங்களையும் ஒன்றன்மீதொன்றாக வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.



(1) 

(2) 

(3) 

34. ஒரு பரீட்சையில் தாரணி, மதுவிலும் அதிக புள்ளிகளைப் பெற்றிருந்த போதும் மாலாவிலும் குறைந்த புள்ளிகளையே பெற்றாள். இதன்படி, கூறக்கூடிய சரியான கூற்று யாது?

(1) மாலா பெற்றது மது பெற்றதிலும் பார்க்கக் குறைந்த புள்ளிகள் ஆகும்.

(2) மது பெற்றது தாரணி பெற்றதிலும் பார்க்கக் கூடிய புள்ளிகளாகும்.

(3) இம்மூவரிலும் குறைவான புள்ளிகளைப் பெற்றவர் மது ஆவார்.

35. ஒரு குறித்த வருடத்தின் செப்ரம்பர் 1 ஆம் நாள் வெள்ளிக்கிழமை ஆகும். அம்மாதத்தின் கடைசி சனிக்கிழமை உட்பட எல்லா ஞாயிற்றுக் கிழமைகளும் விடுமுறை நாட்கள் எனின், அம்மாதத்தில் வரும் வேலை நாட்கள் எத்தனை?

(1) 22 (2) 24 (3) 25

36. முரளி பிறந்தது 2014.05.06 ஆம் திகதியாகும். 2014 ஜனவரி முதலாம் நாள் வெள்ளிக்கிழமை எனின், முரளி பிறந்த தினம் எது?


(1) வியாழக்கிழமை (2) ஞாயிற்றுக்கிழமை (3) வெள்ளிக்கிழமை

www.ikeou.lk

37. 50 தொடக்கம் 59 வரையுள்ள எண்களை எழுதும் போது இலக்கம் 5 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 9 (2) 10 (3) 11

● தரப்பட்டுள்ள உருவில் கிரிக்கட்டை விரும்பும் பிள்ளைகள் சதுரத்தினாலும் உதைபந்தை விரும்பும் பிள்ளைகள் முக்கோணியினாலும் கரப்பந்தை விரும்பும் பிள்ளைகள் செவ்வகத்தினாலும் காட்டப்பட்டுள்ளனர். அதனை அவதானித்து 38, 39 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.




38. மூன்று விளையாட்டையும் விரும்பும் பிள்ளை யார்?

(1) மது (2) காதர் (3) ரவி

39. ஏதேனும் ஒரு விளையாட்டை மாத்திரம் விரும்பும் பிள்ளைகள் யாவர்?

(1) மது, விஜி, காதர்
(2) புனிதா, காதர், விஜி
(3) புனிதா, அமுதா, நளினி

40. 

உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் சுற்றிவர உள்ள நீளமானது,

(1) முழு உருவின் சுற்றிவர உள்ள நீளத்திலும் குறைந்தது
(2) முழு உருவின் சுற்றிவர உள்ள நீளத்திற்குச் சமனானது
(3) முழு உருவின் சுற்றிவர உள்ள நீளத்திலும் கூடியது

* * *

www.ikedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

முன்னோடி வினாத்தாள் 1

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2022

வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதுக.
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

ஆறு அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றின் இரு மருங்கிலும் வானளாவ வளர்ந்த மருத மரங்கள் கிளைபரப்பி நின்றன. மந்திகள் கூட்டம் மரங்களில் தாவித் திரிந்தது. ஆற்றோரங்களில் வெள்ளைக் கொக்குகள் கூட்டங்கூட்டமாகக் காணப்பட்டன. மீனவர்கள் சிலர் ஆற்றில், கட்டுமரத்தில் சென்று வலைவீசி மீன்பிடித்தனர்.

- பந்தியை **மாத்திரம்** துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) ஆறு எவ்வாறு ஓடிக் கொண்டிருந்தது? : .....

(ii) மருத மரங்கள் எங்கே கிளைபரப்பி நின்றன? : .....

(iii) மந்திகள் கூட்டம் யாது செய்தது? : .....

(iv) பந்தியில் இடம்பெற்றுள்ள பெயரடைமொழி ஒன்றை எழுதுக. : .....

(v) 'மிக உயரமாக' என்பதைக் குறிப்பிடுவதற்குப் பந்தியில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் யாது? : .....

(vi) மீனவர்கள் எதில் சென்று மீன் பிடித்தனர்? : .....

2. பின்வரும் வாக்கியத்தின் சொற்களில் உள்ள பிழையான எழுத்துக்களைத் திருத்தி வாக்கியத்தை மீண்டும் எழுதுக.

இயற்க்கை எளில் கொஞ்சும் நகரமே கண்டி மாநகரமாகும்.

.....

3. பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியாக்கி இறந்தகால வினைச் சொல் சேர்த்து மீண்டும் எழுதுக.

(i) நான் புட்டும் கறியும் சாப்பிடுகின்றேன்.

.....

(ii) அவன் கோடாலியால் மரத்தை வெட்டுகின்றான்.

.....

4. தடித்த எழுத்தில் காணப்படும் மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுக.

(i) நம்மை நம்பியவர்களை **நட்டாற்றில் விடல்** தருமம் ஆகாது.

.....

(ii) ஆசிரியர் மாலனைத் தட்டிக்கொடுத்தார்.

.....

5. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுக.

(i) பிரதான / ஆகும் / உணவு / வண்ணத்துப் பூச்சிகளின் / அமுதம்

.....

(ii) தமது / அண்டியே / குடியிருப்புக்களை / முற்கால / அமைத்தனர் / குளங்களை / மக்கள்

.....

.....

www.lkedu.lk

சுட்டெண்: .....

6. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

(i) நீ இங்கே வா என்று ஆசிரியர் அழைத்தார்

(ii) நீங்கள் காலையுணவை உண்டீர்களா

7. வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) போட்டியில் மத்திய மாகாண அணி வெற்றி ..... (பெற்றது / பெற்றனர்)

(ii) உயர்ந்த மரங்களின் கிளைகளில் குருவிகள் கூடு ..... (கட்டியது / கட்டின)

(iii) கள்வர் கூட்டம் தப்பி ..... (ஓடியது / ஓடினர்)

8. பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

கோபம் சிந்தனைக்கு இடையூறாக இருக்கும்.

.....

9. பின்வரும் வாக்கியத்தைப் பெண்பால், ஒருமை, நிகழ்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.

தம்பி ஓவியம் வரைகிறான் : .....

10. எதிர்ச் சொல்லை எழுதுக.


பெருமை : .....

11. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய **தமிழ்ச்** சொற்களை எழுதுக.

(i) clouds : ..... (ii) national anthem : .....

12. தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்துக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை **ஆங்கில** எழுத்துக்களிலேயே எழுதுக.

(i) 

(ii) 

....

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) is / fruit / It / a : .....

(ii) live / Colombo / I / in : .....

14. 'ஷிஷ்யயா' என்ற சிங்களச் சொல்லுக்குரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக.

.....

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் **தமிழில்** எழுதுக.

உங்கள் பாடசாலை எது? : .....

www.keau.lk

16. ஒன்றினிடம் 5, பத்தினிடம் 0, நூறினிடம் 7, ஆயிரத்தினிடம் 3, பத்தாயிரத்தினிடம் 5 ஆகவுள்ள எண்ணை எழுதுக.

: .....

17. 7956 எனும் எண்ணில் இலக்கம் 9, இலக்கம் 6 ஆகியவற்றினால் வகைகுறிக்கப்படும் பெறுமானங்களை எழுதுக.

: ....., ...

18. பின்வரும் எண்களை இறங்குவரிசையில் எழுதுக.

12642, 12691, 12672 : .....

19. தரப்பட்டுள்ள எண்கோலங்களின் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

(i) 2, 8, 14, 20, ... (ii) 27, 23, 19, 15, ...

20. மூன்று ஆரம்பப் பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைகள் தொடர்பான விவரங்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

பாடசாலை	மாணவர்களின் எண்ணிக்கை
A	460
B	275
C	825

(i) A, B ஆகிய பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

(ii) C பாடசாலையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையானது A, B ஆகிய பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கையை விட எவ்வளவு கூடுதலானது?

: .....

21. ஒரு மாணவனுக்கு நான்கு விசுக்கோத்துகள் வீதம் ஒரு சுற்றுலாவில் பங்குபற்றும் 126 மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கு எத்தனை விசுக்கோத்துகள் தேவை?

: .....

22. 6m 80cm நீளமுள்ள ஒரு பூம்பாத்தியை மறுபடியும் அமைத்தபோது அதன் நீளம் 8m 60cm ஆக இருந்தது. அதன் அதிகரித்த நீளம் யாது?

: .....m .....cm

23. 540 எள்ளுருண்டைகளை ஒரு பைக்கற்றில் ஐந்து வீதம் எத்தனை பைக்கற்றுக்களில் இடலாம்?

: .....

24. 1kg தக்காளியின் விலை 120 ரூபாய் ஆகும். 1kg 750g தக்காளியை வாங்க எவ்வளவு பணத்தைச் செலுத்த வேண்டும்?

: ..... ரூபாய்


25. ஒன்று 85 ரூபாய் வீதம் இரண்டு பயிற்சிப் புத்தகங்களையும் ஒன்று ரூபாய் 25 வீதம் மூன்று பேனைகளையும் வாங்குவதற்கு என்னிடம் 200 ரூபாய் உள்ளது. மேலும் எவ்வளவு பணம் தேவைப்படும்?

: ..... ரூபாய்

26. ஒரு பாத்திரத்தில் 5 *l* 900 *ml* பாலும் இன்னொரு பாத்திரத்தில் 3 *l* 250 *ml* பாலும் இருந்தது. இரண்டு பாத்திரங்களிலும் இருந்த பாலின் மொத்த அளவு யாது?

: .....*l* .....*ml*

www.ikedu.lk

27. 


உருவில் காணப்படும் திண்மத்தில் உள்ள,

(i) உச்சிகளின் எண்ணிக்கை யாது? : .....

(ii) விளிம்புகளின் எண்ணிக்கை யாது? : .....

28. தரப்பட்டுள்ள நேரத்தைக் கடிகார முகத்தில் வகைகுறித்துக் காட்டுக.

நேரம் 9.55 மணி




29. ஒரு குறித்த மாணவர் குழுவிடம் அவர்கள் விரும்பும் உணவு வகை பற்றிப் பெறப்பட்ட தகவல்கள் பின்வரும் வரைபில் காட்டப்பட்டுள்ளன.

(i) மாணவர்கள் சமனான எண்ணிக்கையில் விரும்பும் இரு உணவு வகைகளும் யாவை?

: ....., ...

(ii) இடியப்பத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க ரொட்டியை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு கூடுதலானது?

: .....



● 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30. எமது சமூகம் அனுசரிக்கும் வழக்காறுகளில் **செய்யத்தகாதவற்றில்** அடங்குவது எது?
(1) மூத்தோரின் முன்னிலையில் எழுந்து நிற்றல்
(2) சப்புக் கொட்டியவாறு உண்ணல்
(3) உணவு உண்ண முன்னர் கைகளைக் கழுவிக் கொள்ளல்

31. தினமும் போதிய அளவு நீர் **அருந்தாத** ஒருவருக்கு ஏற்படக்கூடிய ஒரு விளைவாக அமைவது,
(1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
(2) சௌகரியமாகச் சிறுநீர் கழிக்கமுடிதல்
(3) உடலில் இருந்து கழிவுப் பொருள்கள் சீராக வெளியேறுதல்

32. உடல், உள சுகத்திற்காகச் செய்யப்படும், மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடுகளில் பிரார்த்தனை, உதிப்பு (மலர்வு) என்பனவற்றின் படிமுறைகள் முறையே எவை?
(1) 3 ஆம் 5 ஆம் (2) 3 ஆம் 4 ஆம் (3) 4 ஆம் 5 ஆம்

33. தேசியக் கொடியில் தமிழ் மக்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருப்பது,
(1) பச்சை நிறப்பட்டி (2) செம்மஞ்சள் நிறப்பட்டி (3) வாளேந்திய சிங்கம்

34. இலங்கைத் தேசிய இலச்சினையில் உள்ள குறியீட்டினையும் அதனால் குறிக்கப்படுவதையும் சரியாகக் காட்டும் விடை,
(1) தர்மச் சக்கரம் - சௌபாக்கியம்
(2) பூவிதழ்கள் - தேசத்தின் மகத்துவம்
(3) சூரியன், சந்திரன் - நித்திய நிலைத்திருப்பு

35. கிறிஸ்தவ சமயத்துடன் தொடர்புடைய அலங்கரிப்பினைக் காட்டும் உரு எது?

(1) 

(2) 

(3) 

36. வெண்டி இலையின் வடிவத்தை ஒத்த வடிவம் உள்ள இலை வகை எது?

(1) அகத்தி (2) பலா (3) ஆமணக்கு

37. "சங்கிலி புங்கிலி கதவத் திற" என்ற பாட்டு உருவிலான உரையாடலுடன் ஆடப்படும் கிராமிய விளையாட்டு எது?

(1) பல்லாங்குழி (2) பசுவும் புலியும் (3) சடுகுடு

38. "விடிவெள்ளி நம் விளக்கு ஐலசா
விரிகடலே பள்ளிக் கூடம் ஐலசா" என்று தொடங்கும் இப்பாடல்,

(1) மீனவர் பாடல் (2) கமக்காரர் பாடல் (3) கம்மாலைக்காரன் பாடல்

39. சூரிய நமஸ்காரச் சந்தர்ப்பங்கள் பன்னிரண்டிலும் ஒரே வகையான மெய்ந்நிலைகளைக் கொண்ட சந்தர்ப்பங்கள் இரண்டு,

(1) 4 உம் 8 உம் (2) 3 உம் 10 உம் (3) 6 உம் 9 உம்

40. உலக மரபுரிமையாகக் கணிப்புப் பெற்ற இடம் **அல்லாதது,**

(1) தம்புள்ள பொற்கோயில்
(2) யால தேசியவனம்
(3) இலங்கையின் மத்திய மலைப்பகுதிகள்

41. நீரின் மூலம் பரம்பலடையும் ஒரு வித்தையும் காற்றின் மூலம் பரம்பலடையும் ஒரு வித்தையும் ஒழுங்கு முறைப்படி குறிப்பிடும் விடை எது?

(1) மரமுந்திரிகை, பாகல் (2) கடல் மாங்காய், மகோகனி (3) மகோகனி, எண்ணை

42. பொதுப் போக்குவரத்துச் சேவையை வழங்கும் பேருந்து ஒன்றைத் தனது பிரயாணத்திற்குப் பயன்படுத்தும் ஒருவர் கட்டாயமாகச் செய்ய வேண்டியது,

(1) தனக்கு விருப்பமான ஆசனம் ஒன்றில் அமர்ந்து கொள்ளல்
(2) பயணச் சீட்டினைப் பெற்றுக் கொள்ளுதல்
(3) பேருந்தில், ஏறுவதற்கு முன்பக்க வழியையும் இறங்குவதற்குப் பின்பக்க வழியையும் பயன்படுத்துதல்.

43. இரவில் மலரும் பூக்கள் **மாத்திரம்** அடங்கியுள்ள விடை,

(1) கடுபுல், பவளமல்லிகை (2) அலரி, ரோசா (3) தாமரை, பவளமல்லிகை

44. பூ பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

(1) எல்லாப் பூக்களிலும் கேசரங்கள் காணப்படும்.
(2) எல்லாப் பூக்களிலும் காயாக வளர்ச்சி அடையும் பூவின் பகுதி பூ இதழ்களுக்கு மேலே காணப்படும்.
(3) காயாக மாறும் பூவின் பகுதி சூலகம் ஆகும்.

www.ikedu.lk

45. மயக்கமடைந்த ஒருவருக்குச் செய்யக் **கூடாதது,**
(1) நீர் புகட்டுவதற்கு முயற்சித்தல்.
(2) ஆழமாகச் சுவாசிக்க விடல்.
(3) நோயாளியைச் சூழ, காற்றோட்டம் இருக்க வகை செய்தல்.


46. தண்டாக நடப்பட்டு கன்றுகள் பெறப்படத்தக்க பயிர் வகை,
(1) மிளகாய் (2) கங்குன் (3) உருளைக்கிழங்கு

47. ஆணியைக் கழற்ற சுத்தியலைச் சரியாகப் பிடிக்க வேண்டிய முறை எது?


(1)


(2)


(3)

48. 

உருவில் உள்ள உபகரணத்தின் பயன்பாடு யாது?
(1) சுவரைக் கட்டும்போது நிலைக்குத்தியல்பைப் பேணல்
(2) வளையின் கிடையியல்பைப் பேணல்.
(3) பாரமான பொருட்களை மேலுயர்த்தல்

49. போலியான, தரக்குறைவான பண்டங்களை விற்பனை செய்யும் ஒருவருக்கு எதிராக நுகர்வோர் ஒருவர், முறைப்பாடு செய்வதற்கு மிகப் பொருத்தமான இடம்,
(1) கிராமசேவகர் காரியாலயம் (2) பிரதேச சபை
(3) நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை

50. மென்பானப் போத்தல்களில், அவற்றில் அடங்கியுள்ள சீனி மட்டத்தைக் காட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் நிறக்குறியீட்டுத் தொகுதியில் அடங்கும் மூன்று நிறங்களும் எவை?
(1) சிவப்பு, செம்மஞ்சள், நீலம் (2) சிவப்பு, மஞ்சள், பச்சை
(3) சிவப்பு, நீலம், பச்சை

51. தாழ் நிலங்களை நிரப்புதல், மணல் அகழ்தல் ஆகிய மனிதச் செயற்பாடுகளால் நிகழக்கூடிய விபத்து,
(1) வெள்ளம் (2) வறட்சி (3) சூறாவளி

52. பனிக்கட்டிகளை உருகாது நீண்ட காலம் பேணுவதற்கு செய்யக்கூடிய முறைகளில் ஒன்று,
(1) பனிக்கட்டிகளுக்கு மேலே மரத்தூளைப் பரவி மூடிவைத்தல்.
(2) மட்டைப் பெட்டியில் இட்டு மூடிவைத்தல்.
(3) நீர் நிரம்பிய பாத்திரத்தினுள் இட்டு வைத்தல்.

53. 'இப்பக்கம் மேலே' என்பதற்குப் பயன்படுத்தப்படும் உருவக் குறியீடு,


(1)



(2)


(3)


54. வீதிச் சமிக்ஞை விளக்குகளின் தூணில் பச்சை நிற மின்குமிழ் ஒளிர்வதனால் குறிப்பிடப்படுவது,
(1) வாகனத்தைச் செலுத்துக என்பது
(2) வாகனத்தை நிறுத்துக என்பது
(3) வாகனத்தைச் செலுத்த ஆயத்தமாகுக என்பது

55. செவிப்புலன் மூலம் மாத்திரம் தகவல்களைப் பெறக்கூடிய இரண்டு தொடர்பாடல் ஊடகங்கள் எவை?
(1) வானொலி, தொலைக்காட்சி (2) வானொலி, ஒலிபெருக்கி
(3) செய்திப் பத்திரிகை, ஒலிபெருக்கி

56. தட்டையான பாத்திரம் ஒன்றில் 100 மில்லிலீற்றர் நீரை இட்டு அதில் 10 கிராம் உப்பை முழுவதுமாகக் கரைத்த பின்னர் அப்பாத்திரம் சூரிய ஒளி நன்கு படும் இடத்தில் வைக்கப்பட்டது. நாளின் இறுதியில் அவதானித்த போது பாத்திரத்தில்,
(1) இடப்பட்ட கரைசல் அப்படியே இருந்தது (2) உப்பு மாத்திரம் எஞ்சியிருந்தது
(3) கரைசலின் நிறம் மாறியிருந்தது

57. 

கத்தரிக் குறட்டினைப் பயன்படுத்தி, கம்பி ஒன்று வெட்டப்படுவதைப் படம் காட்டுகிறது. கம்பியை வெட்டும் போது கையினால் உதைப்பைப் பிரயோகிக்கும் இடம், குறட்டினால் கம்பி மீது விசை பிரயோகிக்கப்படும் இடம் ஆகியவற்றைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்கள் முறையே எவை?
(1) A, B (2) C, B (3) C, A

58. 
காவலிடப்பட்ட செப்புக்கம்பியினால் சுற்றப்பட்ட இரும்பு ஆணியையும், உலர் மின்கலத்தையும் பயன்படுத்தி செய்யப்பட்ட மின்காந்தம் ஒன்றின் அமைப்பு அருகே தரப்பட்டுள்ளது. இதில் குண்டூசிகளை அருகே கொண்டு செல்லும் போது அவற்றைக் கவர்வது எது?
(1) இரும்பு ஆணி (2) காவலிடப்பட்ட செப்புக்கம்பி (3) உலர் மின்கலம்

59. 'கப்ரன் டோசன்' கோபுரம் காணப்படுவது,
(1) கடுகண்ணாவையில் (2) மாத்தளையில் (3) தம்புள்ளையில்

60. "இன்றைய காலைக் கூட்டத்தில் அதிபர் நிகழ்த்திய உரை, மாணவர்களாகிய எமக்கு மிகவும் பயன்தரக்கூடியதாகும்" என்ற தலைப்பில் **மூன்று** வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1) .....
.....

2) .....
.....

3) .....
.....

* * *

www.ikeou.lk

සියලුහිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம். ஏ. அபுதாஹிர்

Q FIRST

முன்னோடி வினாத்தாள் 2

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2022

வினாத்தாள் I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	V/I/T/CH

www.ikeou.lk

[பக். 2 ஐப் பார்க்க

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

1. தரப்பட்ட உருக்களில் இரண்டு ஒத்தவை. அந்த இரண்டு உருக்களும் யாவை?



A



B



C

(1) A உம் C உம் (2) B உம் C உம் (3) A உம் B உம்

2. கட்டத்தின் உள்ளே உள்ள சித்திரத்துக்குப் பெருமளவில் ஒத்ததாக வரையப்பட்டுள்ள சித்திரம் எது?





(1)



(2)


(3)


3. மிகவும் நெருங்கிய தொடர்பு உள்ள உருச்சோடிக்குரிய அடைப்பினைத் தெரிவு செய்க.


(1)



(2)



(3)

4. அடைப்பில் இருக்கும் கூட்டத்துடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.





(1)


(2)



(3)

5. அடைப்பில் இருக்கும் கூட்டத்துடன் சேர்ப்பதற்குப் **பொருத்தமற்ற** உருவைத் தெரிவு செய்க.




(1)



(2)


(3)

www.ikeduk


சுட்டெண்: .....

6. கட்டத்தினுள் உள்ள உருக்களின் வரிசையில் அடுத்ததாக இட வேண்டிய உரு எது?



(1) (2) (3)

7. வெற்றிடத்துக்குப் பொருத்தமான உரு எது?




(1) (2) (3)

8. தரப்பட்டுள்ள எண் பிரசினத்தின் வெற்றுக் கட்டங்கள் A, B ஆகியவற்றுக்குப் பொருத்தமான எண்கள் முறையே எவை?

7	9	5
A	2	B
1	6	6


(1) 6, 1 (2) 6, 9 (3) 5, 9

9. வெற்றிடத்துக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.




(1) (2) (3)

10. கோலத்துக்கு ஏற்ப -?- குறியீட்டுக்குப் பொருந்தும் எண் யாது?



(1) 9 (2) 12 (3) 20

11. 

உருவில் காணத்தக்க முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?


(1) 12

(2) 14


(3) 16

www.lkedu.lk

12. கட்டத்தினுள் உள்ள உருக்களைப் பாருங்கள்.



இந்த மூன்று உருத் துண்டுகளையும் ஒன்றுபடச்சேர்த்து அமைக்கக்கூடிய தனி உரு எது?



(1)



(2)



(3)

- கீழே தரப்பட்டுள்ள தகவல்களை விளங்கி 13, 14 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.
  - மரம் ஒன்றின் மேல் கிளையில் இருந்த குருவிகளின் எண்ணிக்கை கீழ்க் கிளையில் இருந்த குருவிகளின் எண்ணிக்கையின் இரு மடங்காகும்.
  - கீழ்க் கிளையில் இருந்த குருவிகளில் மூன்று மேல் கிளைக்குச் சென்றன. இப்போது மேல் கிளையில் இருக்கும் குருவிகளின் எண்ணிக்கை கீழ்க் கிளையில் இருக்கும் குருவிகளின் எண்ணிக்கையின் ஐந்து மடங்காக ஆகியது.

13. ஆரம்பத்தில் மரத்தின் கீழ்க் கிளையில் இருந்த குருவிகள் எத்தனை?

(1) 12 (2) 8 (3) 6


14. இரு கிளைகளிலும் இருக்கும் குருவிகளின் மொத்தம் யாது?


(1) 24 (2) 18 (3) 16

15. திங்கள், செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் மாத்திரம் ஒரு சிறுவர் பூங்காவிற்குச் செல்லும் மோகனும் செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் மாத்திரம் அந்தச் சிறுவர் பூங்காவிற்குச் செல்லும் முகுந்தனும் திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் மாத்திரம் அந்தச் சிறுவர் பூங்காவிற்குச் **செல்லாத** நாதனும் ஒரு நாள் அச்சிறுவர் பூங்காவில் சந்தித்தனர் எனின், அந்த நாள் எது?


(1) திங்கள் (2) செவ்வாய் (3) வெள்ளி

16. தரப்பட்டுள்ள கோலத்தில் உள்ள வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான விடை எது?






(1)



(2)



(3)

17. சம்பவம் ஒன்றின் ஐந்து சந்தர்ப்பங்கள் ஒழுங்குமாறித் தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தும் போது மூன்றாவதாக இடம்பெறுவது எது?

A - ஆடைகளை மாற்றினார் B - விளக்கேற்றினார்
C - கதவைத் திறந்தார் D - கட்டிலில் உறங்கினார்
E - வீட்டுக்குள் நுழைந்தார்.

(1) B (2) C (3) E

18. அமுதனின் வயது + அகிலனின் வயது = 14 வருடங்கள்
அகிலனின் வயது + வரதனின் வயது = 11 வருடங்கள்
வரதனின் வயது + அமுதனின் வயது = 13 வருடங்கள்

மேலுள்ள தகவலின்படி அமுதன், அகிலன், வரதன் ஆகிய மூவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை யாது?

(1) 18 வருடங்கள் (2) 19 வருடங்கள் (3) 20 வருடங்கள்

19. வாங்கு ஒன்றில் சில மாணவர்கள் அமர்ந்திருந்தனர். அவர்கள் இடப்பக்கமாகத் தொடங்கி ஒவ்வொருவராக 10, 20, 30, ... என எண்ணிய போது தயாளன் கூறிய இலக்கம் 50 ஆகும். வலப்பக்கமிருந்து அதேபோன்று எண்ணிய போது, தயாளன் கூறிய இலக்கம் 70 ஆகும். வாங்கில் அமர்ந்திருந்த மாணவர்கள் எத்தனை பேர்?

(1) 10 (2) 11 (3) 15

20. குமார் தனது வீட்டிலிருந்து கிழக்கு நோக்கி 50 மீற்றர் தூரம் நடந்து சென்றான். பின்னர் தனது இடப்பக்கமாகத் திரும்பி 50 மீற்றர் தூரம் நடந்து சென்றான். அங்கிருந்து மீண்டும் தனது இடப்பக்கமாகத் திரும்பி 25 மீற்றர் தூரம் நடந்து சென்று நண்பனின் வீட்டை அடைந்தான். நண்பனின் வீட்டுக்கு என்ன திசையில் குமாரின் வீடு அமைந்துள்ளது,

(1) தென்மேற்கு (2) தெற்கு (3) வடமேற்கு

- பின்வரும் கவிதையை வாசித்து 21, 22 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

புள்ளினங்கள் இசைபாடிப் பறந்துவர
பூக்களெலாம் திசைமுழுதும் மணம் பரப்ப
சில்லென்ற பனிக்காற்று எழுந்து வர
சுகமாகப் புலர்ந்ததடா புதுக்காலை

21. இக்கவிதையில் வர்ணிக்கப்படுவது.


(1) பாட்டிசைக்கும் பறவைகளின் வாழ்வு பற்றி.
(2) புலர்கின்ற காலைப் பொழுதின் அழகு பற்றி.
(3) மணம் வீசும் பூக்களின் நிறம்பற்றி.

22. 'சில்லென்ற' என்னும் சொல் வெளிப்படுத்துவது.

(1) காற்றின் வேகத்தை
(2) காற்று வீசும் திசையை
(3) காற்றின் குளிர்ச்சியை

www.keeu.lk

23. தரப்பட்டுள்ள உருக்களில் மூன்றை ஒரு கூட்டமாக ஆக்க முடியும். அவ்வாறு கூட்டமாக்கப் **பொருத்தமற்ற** உருவைத் தெரிவு செய்க.



A B C D

(1) A (2) C (3) D

24. ஒரு பண்ணையில் சில புறாக்கள் இருந்தன. அவற்றின் தலைகளினதும் கால்களினதும் மொத்த எண்ணிக்கை 42 ஆகும். பண்ணையில் இருந்த புறாக்கள் எத்தனை?

(1) 12 (2) 14 (3) 16

25. இன்னும் 8 வருடங்களின் பின் மகனின் வயது அப்பாவின் வயதின் அரைவாசியாக இருக்கும். இப்போது அப்பாவின் வயது 44 வருடங்கள் எனின், மகனுக்கு இப்போது வயது எத்தனை வருடங்கள்,

(1) 18 (2) 24 (3) 26

- 26, 27 ஆகிய வினாக்களின் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

26. கதை கேட்க ..... குழந்தைகள் தாத்தாவைச் சுற்றி ..... அமர்ந்திருந்தனர்.

(1) விரும்பாத - ஆர்வத்துடன்

(2) ஆயத்தமான - ஆர்வத்துடன்

(3) ஆயத்தமான - கோபத்துடன்


27. குறைவான ..... எதையும் வாசித்தல் .....

(1) வெளிச்சத்தில், நல்லது

(2) இருட்டில், நல்லது

(3) வெளிச்சத்தில், கூடாது

28. X, Y, Z என்னும் மூன்று நிறப்பட்டிகளின் நீளம் கீழுள்ளவாறு காட்டப்பட்டுள்ளது.



இம்மூன்று நிறப்பட்டிகளினதும் மொத்த நீளம் யாது?

(1) 35cm (2) 45cm (3) 50cm

29. 6 பென்சில்களையும், 12 பேனைகளையும் வாங்க 168 ரூபாய் தேவையாகும். 4 பேனைகளும் 2 பென்சில்களும் வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?

(1) 52 ரூபாய் (2) 54 ரூபாய் (3) 56 ரூபாய்

30. மூன்று பிள்ளைகள் புத்தகம் ஒன்றில் வாசித்த பக்கங்களின் எண்ணிக்கையும், அதற்காக அவர்கள் எடுத்த நேரமும் கீழே தரப்பட்டுள்ளன.

பெயர்	வாசித்த பக்கங்களின் எண்ணிக்கை	எடுத்த நேரம்
கார்த்திக்	36	9 நிமிடம்
நதீகா	25	5 நிமிடம்
கதீஜா	42	14 நிமிடம்

விரைவாக வாசிக்கும் பிள்ளையிலிருந்து வேகம் குறைவாக வாசிக்கும் பிள்ளை வரை ஒழுங்கு படுத்தினால் கிடைக்கும் விடை எது?

(1) நதீகா, கார்த்திக், கதீஜா
(2) கதீஜா, கார்த்திக், நதீகா
(3) நதீகா, கதீஜா, கார்த்திக்

31. பின்வரும் உருவில் எண்கள் எழுதப்பட்டுள்ள ஒழுங்கிற்கு ஏற்ப நிழற்றப்பட்ட பகுதியில் உள்ள அடைப்புக்களில் வரவேண்டிய விடையைத் தெரிவுசெய்க.

1	2	3	4	5
2				10
3			12	
4				
5		15		25

	6	
6	9	

(1)

	9	
6	12	

(2)

	6	
6	8	


(3)

32. பின்வரும் எந்த எண் தொகுதியிலிருந்து ஓர் எண்ணை நீக்கிவிட்டு மீதமாகும் எண்களைக் கூட்டும்போது 17 விடையாகக் கிடைக்கும்?

(1) 3, 7, 2, 10 (2) 8, 7, 2, 10 (3) 2, 5, 6, 8

33. 38 இலிருந்து எண் A ஐக் கழித்து வரும் விடையை மீண்டும் எண் A இனால் வகுத்தால் மீதியாக 2 கிடைக்கும். எண் A பின்வருவனவற்றுள் எது?

(1) 2 (2) 4 (3) 5

34. 

இந்தச் சதுரமுகி வடிவ மரக்குற்றியின் விளிம்பு ஒன்றின் நீளம் 6*cm* ஆகும். இச்சதுரமுகியில் இருந்து 2*cm* நீளமுள்ள விளிம்பினைக் கொண்ட எத்தனை சிறிய சதுரமுகிகளை அரிந்தெடுக்க முடியும்?

(1) 8 (2) 12 (3) 27

www.lkedu.lk

35. இன்று திங்கட்கிழமை ஆகும். 'நாளை மறுநாள் எனது பிறந்தநாள்' என தேவன் நேற்றுக் கூறினான். தேவனின் பிறந்தநாள் வரும் தினம் எது?

(1) செவ்வாய் (2) புதன் (3) வியாழன்

36. மூன்று இலக்கங்களைக் கொண்ட ஓர் எண் உள்ளது.

- அந்த எண்ணின் முதலாம் இலக்கம், இரண்டாம் இலக்கத்தின் இருமடங்கும் மூன்றாம் இலக்கத்தின் அரைவாசியும் ஆகும்.
- அந்த எண்ணின் மூன்று இலக்கங்களினதும் கூட்டுத்தொகை 14 ஆகும்.

அவ்வெண் கீழே தரப்பட்டுள்ள எண்களில் யாதாக இருக்கலாம்?

(1) 842 (2) 428 (3) 284

37. குடும்பம் ஒன்றில் தந்தையும் தாயும் இருப்பதுடன் அவர்களுக்கு மூன்று மகன்மாரும் அவர்களின் மனைவிமாரும் உள்ளனர்.
ஒவ்வொரு மகன்மாருக்கும் இரண்டு மகன்களும் ஒரு மகளும் என்றவாறு உள்ளனர்.
அக்குடும்பத்தில் உள்ள ஆண் உறுப்பினர்களின் எண்ணிக்கை பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட எவ்வளவால் கூடியதாகும்?

(1) 2 (2) 3 (3) 4

38. ஒரு சுவர்க் கடிகாரம் மு.ப 7.35 இற்கு இயங்கத் தொடங்கியது. மு.ப 11.00 ஆகும்போது கடிகாரத்தின் நிமிட முள்ளானது கடிகாரத்தை முழுமையாகச் சுற்றி வந்த பூரண சுற்றுக்களின் எண்ணிக்கை யாது?

(1) 3 (2) 4 (3) 5

39. விடுதியொன்றில் இருக்கும் 10 பிள்ளைகளுக்கு நான்கு நாட்களுக்குப் போதுமான உணவு உள்ளது. இவ்வுணவு 8 பிள்ளைகளுக்கு எத்தனை நாட்களுக்குப் போதுமானதாகும்?

(1) 5 (2) 6 (3) 7

40. பாத்திரமொன்றைப் பூரணமாக நீரினால் நிரப்பி நிறுத்தபோது அதன் நிறை $1kg$ ஆகவும், அதே பாத்திரத்தின் $\frac{1}{4}$ பங்கிற்கு மீண்டும் நீரை ஊற்றி நிறுத்தபோது அதன் நிறை $400g$ ஆகவும் இருந்தது. இதன்படி பாத்திரத்தின் நிறை யாது?

(1) $500g$ (2) $300g$ (3) $200g$

* * *

www.ikedu.lk

සියලුමහිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

Q FIRST Q FIRST Q FIRST Q FIRST Q FIRST Q FIRST Q FIRST Q FIRST Q FIRST Q FIRST Q FIRST

முன்னோடி வினாத்தாள் 2

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2022

வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதுக.
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

www.ikeou.lk

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

வெள்ளி ஓடம் போல உலாவரும் பிறைச் சந்திரன் பொன்னொளியை வீசிக் கொண்டிருந்தது. தொங்க விடப்பட்ட தங்கத் தகடுகளைப் போல நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன. வானில், அங்குமிங்கும் சில கருமேகக் கூட்டங்கள் காணப்பட்டன. அவை, காற்று வீசும் திசை வழியே தொலைவு நோக்கிச் சென்று கொண்டிருப்பதை எம்மால் காண முடிந்தது.

- பந்தியை **மாத்திரம்** துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) பொன்னொளியை வீசிக் கொண்டிருந்தது எது? : .....

(ii) நட்சத்திரங்கள் எதைப் போல மின்னிக் கொண்டிருந்தன?

: .....

(iii) காற்று வீசும் திசை வழியே சென்று கொண்டிருந்தவை எவை?

: .....

(iv) 'தூரம்' என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.: .....

(v) இங்கு இடம்பெற்றுள்ள இணைமொழியை எழுதுக. : .....

(vi) பொன்னொளி என்பதைப் பிரித்து எழுதுக. : .....

2. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள **சரியான எழுத்துக்** கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) பொறுமை பேணுதல் ஓர் (உன்னதமான / உண்ணதமான) பண்பாகும்.

(ii) ஆபத்து வரும்போது போராடுவதற்காக எமது (படையணி / படையனி) எப்போதும் தயாராக இருக்கும்.

3. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

உள்ள / ஆவியாகி / பெய்யும் / மீண்டும் / ஆறு / நீர் / குளங்களில் / மழையாகப்

.....

.....

4. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் '✓' எனவும் பிழையாயின் '×' எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறியினுள் அடையாளம் இடுக.

(i) அவரிடம் ஆராயும் இயல்பும் சிந்தனைத் திறனும் இருந்தது. (.....)

(ii) தாய்ப்பறவை குஞ்சுகளுக்கு உணவளித்தது. (.....)

(iii) எல்லோரும் மேடையில் அமர்ந்தனர். (.....)

(iv) குருவிகள் கூட்டங்கூட்டமாகப் பறந்தது. (.....)

5. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறிகளை இடுக.

கல்விக்கு அழகு கசடற மொழிதல் என்றனர் எம் முன்னோர்கள்

www.ikdu.lk

சுட்டெண்: .....

6. கீழே தரப்பட்ட சொற்றொடர்களுக்குரிய தனிச் சொல்லை எழுதுக.

(i) அரண்மனையில் பெண்கள் வசிக்கும் இடம் : .....

(ii) நடக்க இருப்பவற்றை முன்னரே கூறுபவர் : .....

7. (i) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

இரக்கப் போனாலும் .....

(ii) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

விடாமுயற்சியாற் பயன் உண்டு

.....

8. பின்வரும் வாக்கியத்தை நிகழ்காலத்தில் மாற்றி எழுதுக.

அவள் இனிமையாகப் பாடினாள்.

.....

9. எதிர்ப்பாற் சொல்லை எழுதுக.

உழவன் : .....

10. பின்வரும் பேச்சுவழக்குச் சொற்களை எழுத்து வழக்குச் சொற்களாக மாற்றி எழுதுக.

(i) கைமாறு : ..... (ii) தலகணி : .....

11. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக.

(i) Milk : ..... (ii) Newspaper : .....


12. ஒவ்வொரு படத்துக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைக் கட்டத்தினுள் **ஆங்கில** எழுத்துக்களில் எழுதுக.

(i)



M				e	

(ii)



H		m			

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) red / I / beak / a / have : .....

(ii) to / walk / I / school : .....

www.lkedu.lk

14. 'விதுஹல்பதி' என்ற சிங்களச் சொல்லுக்குரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக.

: .....

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் **தமிழில்** எழுதுக.

இங்கே வாருங்கள் : .....

16. பின்வரும் எண்ணை எழுத்தில் எழுதுக.

3709 : .....

17. 2647 எனும் எண்ணில்,

(i) இலக்கம் 6 அமைந்துள்ள இடம் யாது?

: .....

(ii) இலக்கம் 4 இனால் வகைகுறிக்கப்படும் பெறுமானம் யாது?

: .....

18. பின்வரும் நேரத்தை 12 மணித்தியாலக் கடிகார நேரத்தில் எழுதுக.

01:30 : .....

19. 32 புத்தகங்களில் $\frac{3}{4}$ விற்கப்பட்டது. மீதியாகவுள்ள புத்தகங்கள் எத்தனை?

: .....

20. அம்மா, 4kg 350g பொதியையும் அப்பா 7kg 750g பொதியையும் சந்தையில் இருந்து கொண்டுவந்தனர். இருவரும் கொண்டுவந்த பொதிகளின் மொத்த நிறை யாது?

: .....kg .....g


21. 5 மீற்றர் நீளமுள்ள ஒரு கயிற்றில் இருந்து 30 சென்ரிமீற்றர் அளவுள்ள ஆறு துண்டுகள் வெட்டி எடுக்கப்பட்டன. மீதியாகவுள்ள கயிற்றின் நீளம் யாது?

: .....m .....cm


22. வீட்டின் ஒரு அறைக்கு தீந்தை பூசுவதற்கு *8l 600ml* தீந்தை தேவை. அவ்வாறான மூன்று அறைகளுக்குத் தீந்தை பூசுவதற்குத் தேவையான தீந்தையின் அளவு யாது?

: .....*l* .....*ml*

23.



ஆரம்பித்த நேரம்



முடிவடைந்த நேரம்


பாடசாலையில் இடம்பெற்ற பரிசளிப்பு விழா ஆரம்பித்த நேரத்தையும் முடிவடைந்த நேரத்தையும் கடிகார முகங்கள் காட்டுகின்றன.

பரிசளிப்பு விழா எவ்வளவு நேரம் நடைபெற்றது?

: ..... மணித்தியாலம் ..... நிமிடம்

www.lkedu.lk

24. கீழுள்ள உருக்களை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக.



A B C D E

(i) **சமச்சீரல்லாத** உருக்களுக்குரிய ஆங்கில எழுத்துக்கள் எவை?

: .....

(ii) அதிக எண்ணிக்கையான சமச்சீர்க் கோடுகள் வரையப்படத்தக்க உருவுக்குரிய ஆங்கில எழுத்து யாது?

: .....

25. பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

பொருள்	ஒரு kg இன் விலை		வாங்கிய அளவு	பெறுமதி	
	ரூபாய்	சதம்		ரூபாய்	சதம்
சீனி	255	00	2kg	(i)	.....
தேயிலை	(ii)	.....	250g	170	00
பருப்பு	540	00	500g	270	00
மொத்தப் பணம்				950	00

26. ஒரு கொடிச் சரத்தில் 4 கொடிகள் வீதம் 816 கொடிகளைக் கொண்டு எத்தனை சரங்களைத் தயாரிக்கலாம்?

: .....


27. பின்வரும் எண்களை இறங்கு வரிசைப்படுத்தி எழுதுக.

5093, 5309, 3509 : ....., ..., ...

28. ஒரு புகையிரதத்தில் 826 பயணிகள் இருந்தனர். முதல் புகையிரத நிலையத்தில் 118 பயணிகள் இறங்கும் அதேவேளை 292 பயணிகள் ஏறினர். இப்போது புகையிரதத்தில் உள்ள பயணிகளின் எண்ணிக்கை யாது?

: .....

29. ஒரு நாளின் தொடக்கத்தில் பழக்கடை ஒன்றில் அன்னாசி, மா, மாதுளை, கொய்யா ஆகிய ஒவ்வொன்றும் 20 வீதம் விற்பனைக்காக வைக்கப் பட்டிருந்தன. விற்பனை நிறைவடைந்த பின் கடையில் மீதமாயிருந்த பழங்கள் பற்றிய விபரம் வரைபில் காட்டப்பட்டுள்ளது.



(i) கடையில் கூடுதலாக விற்கப்பட்ட பழம் எது?


: .....

(ii) விற்கப்பட்ட அன்னாசிப் பழங்கள் எத்தனை?

: .....

● 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30. இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர்,
(1) அநகாரிக தர்மபால (2) W.D. அமரதேவ (3) ஆனந்தசமரகோன்

31. 

தரப்பட்டுள்ள தேசிய இலச்சினையில் A, C எனக் காட்டப்பட்டுள்ள பகுதிகள் முறையே எவை?
(1) தர்மச்சக்கரம், சந்திரன்
(2) தர்மச்சக்கரம், சூரியன்
(3) வாளேந்திய சிங்கம், சூரியன்

32. ஒரே வடிவ இலைகளைக் கொண்டுள்ள தாவரங்கள்,
(1) ஈரப்பலா, கத்தாப்பு (2) புளி, அகத்தி (3) ஆமணக்கு, கரும்பு

33. விளக்குமாறைப் பயன்படுத்தும் போது **செய்யக்கூடாதது** யாது?
(1) விளக்குமாறின் இரண்டு பக்கங்களும் பயன்படும் வகையில் அதன் பக்கத்தை மாற்றி மாற்றிப் பயன்படுத்துதல்.
(2) பல்வேறு தேவைகளுக்கென விளக்குமாறில் இருந்து ஈர்க்குகளை முறித்தல்.
(3) பயன்படுத்திய பின்னர் ஈர்க்குகள் மேல் நோக்கி இருக்குமாறு வைத்தல்.

34. உடலுக்கு சக்தியைத் தரும் உணவு,
(1) பருப்பு (2) சோறு (3) அன்னாசி

35. நுளம்புகளினால் பரப்பப்படும் நோய்களில் இரண்டு எவை?
(1) சின்னமுத்து, சீதபேதி (2) கொப்பளிப்பான், கழிச்சல் (3) யானைக்கால், மலேரியா

36. ஆதிகாலத்தில் நீரைச் சுத்தம் செய்த முறை எது?
(1) வடிகட்டியைப் பயன்படுத்துதல் (2) கரியை நீரில் இடுதல் (3) குளோரீன் இடுதல்

37. நீராவியில் அவிப்பதனால் தயாரிக்கப்படும் உணவுகள்,
(1) இடியப்பமும் பிட்டும் (2) பாணும் கேக்கும் (3) ரொட்டியும் சோறும்

38. வீதித் தேசப்படத்தில் அதிவேகப் பாதையைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நிறம் எது?
(1) சிவப்பு (2) கறுப்பு (3) ஊதா


39. மழை பெய்யப் போவதை உணர்ந்து கொள்ளத்தக்க விலங்கின் நடத்தை,
(1) பூனை கத்துதல் (2) நாய் குரைத்தல் (3) ஈசல் (மெருன்) பறத்தல்

40. மாமிச வகையை **மாத்திரம்** உணவாகக் கொள்ளும் விலங்குகள்,
(1) கோழி, நாய், சிங்கம் (2) முயல், நாய், ஆடு (3) தும்பி, சிங்கம், நரி

41. இலங்கையின் தேசியக் குறியீடு **அல்லாதது,**
(1) காட்டுக்கோழி (2) நீலோற்பலம் (3) நிறைகுடம்

42. வருடத்தின் ஒரு குறித்த காலத்தில் **மாத்திரம்** பூக்கும் ஒரு தாவரத்தையும் கால வேறுபாடின்றி வருடம் முழுவதும் பூக்கக்கூடிய ஒரு தாவரத்தையும் முறையே காட்டும் விடை எது?
(1) இலுப்பை, தென்னை (2) வாகை, விளா (3) பாலை, மா

www.ikedu.lk

43. 

இவ்வுபகரணத்தினால் செய்யத்தக்க ஒரு வேலை,
(1) மரப்பலகையில் துளையிடுதல்
(2) சுரையை இறுக்குதல்
(3) திருகாணியை இறுக்குதல்

44. தனிப்பட்ட வகையில் ஒருவர் பயன்படுத்த வேண்டிய பொருள்கள் இரண்டு
(1) சீப்பு, பேனை (2) பற்தூரிகை, சீப்பு (3) குடை, தொலைபேசி

45. 

கைக்குட்டையின் அந்தத்தில் உருவில் காட்டப்பட்டவாறான பூவைத் தைக்கும்போது பூ இதழ்களைச் சுற்றித் தைக்க வேண்டிய தையல் எது?
(1) கம்பளித்தையல் (2) வெட்டுக்குத்துத்தையல்
(3) சங்கிலித்தையல்


46. குறித்த வேளையில் உணவை உண்ணாமல் இருப்பதால் ஏற்படத்தக்க ஒரு நோய்,
(1) நீரிழிவு (2) உயர்குருதி அமுக்கம் (3) இரைப்பையழற்சி


47. "பச்ச வளையல் தொட்டு ஏலேலோ மயில் ஏலேலோ
பயிரறுக்கப் போற பெண்ணே ஏலேலோ மயில் ஏலேலோ" என்னும் பாடல்,
(1) அரிவிவெட்டுப்பாடல் (2) வண்டிப்பாடல் (3) மீனவர் பாடல்


48. உணவை உண்ணும் போது கடைப்பிடிக்க வேண்டிய நற்பழக்கங்களில் **அடங்காதது**
(1) வேறு செயல்கள் எதிலும் ஈடுபடாது உணவு உண்ணுதலில் மட்டும் கவனம் செலுத்துதல்.
(2) உதடுகளை அதிகமாகத் திறக்காது உணவை உண்ணுதல்.
(3) உணவை மெல்லும் போது நன்றாக சப்புக்கொட்டுதல்.

49. உபகரணங்கள் இன்றி விளையாடப்படும் கிராமிய விளையாட்டு
(1) சடுகுடு (2) தாயம் போடுதல் (3) கிட்டிப்புள்

50. மின்குமிழ் ஒளிரத்தக்க விதத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள அமைப்பு எது?


(1)


(2)


(3)

51. பிறருக்கு அசௌகரியம் **ஏற்படாத** வகையில் நாம் செயற்படும் ஒரு சந்தர்ப்பம்,
(1) பேருந்தில் பயணிக்கும் போது உரத்த குரலில் தொலைபேசியில் உரையாடுதல்.
(2) நண்பர்களுடன் சேர்ந்து வீதியில் விளையாடுதல்.
(3) வாகன நெரிசல் உள்ள பெருந்தெருவில் பாதசாரிகள் கடவையினூடாகப் பாதையைக் கடத்தல்.

52. தேசிய மரபுரிமையாகவும் உலக மரபுரிமையாகவும் கணிப்புப் பெற்றுள்ள இலங்கையின் இயற்கை இடங்களில் ஒன்று,
(1) சிகிரியா (2) பொலன்னறுவை புராதன நகர் (3) சிங்கராஜ வனம்

53. தான் சஞ்சரிக்கும் மேற்பரப்புகளில் ஒட்டிக்கொள்ளக் கூடிய விஷேட பாதங்களைக் கொண்டுள்ள பிராணி,
(1) பல்லி (2) அணில் (3) கரப்பான்

www.ikeu.lk


54. 'டங்கன் வைட்' என்பவர், பின்வரும் எப்போட்டி நிகழ்ச்சியில் பங்குகொண்டு இலங்கைக்கு ஒலிம்பிக் பதக்கம் ஒன்றைப் பெற்றுக் கொடுத்தார்?
(1) ஆண்களுக்கான நானூறு மீற்றர் ஓட்டம்.
(2) ஆண்களுக்கான நானூறு மீற்றர் தடைதாண்டும் ஓட்டம்.
(3) ஆண்களுக்கான இரு நூறு மீற்றர் ஓட்டம்.

55. நீரில் மூழ்கிய ஒருவருக்கு முதலுதவி அளிக்கும் போது முதலில் செய்ய வேண்டியது யாது?
(1) ஈர உடையை அகற்றுதல்.
(2) போர்வையினால் உடலின் வெப்பத்தைப் பாதுகாத்தல்.
(3) நன்றாகச் சுவாசிப்பதைச் சோதித்தல்.

56. பயிர்ச்செய்கைக்குச் சேதம் விளைவிக்கும் பிராணிகள்
(1) மண்புழு, ஆந்தை (2) ஆந்தை, குளவி (3) தத்துவெட்டி, தண்டுகோதி

57. சிறு பிராயம் முதலே நேரசூசி ஒன்றின்படி வேலை செய்யப்பழகிய ஒருவரிடம் காணப்படக்கூடியது
(1) எந்த வேலையைச் செய்யும் போதும் நிதானமின்றிச் செயற்படுவார்.
(2) எப்போதும் தனக்குரிய வேலையைக் குறித்த நேரத்தில் செய்து முடிப்பார்.
(3) தனக்குரிய எந்த ஒரு வேலையையும் தனியாகவே செய்து முடிப்பார்.

58. வீட்டில் நீண்ட நாட்களாகப் பயன்படுத்தப்படாமல் இருந்த தையல் இயந்திரத்தை மீளவும் இயக்க வேண்டிய தேவை அம்மாவுக்கு ஏற்பட்டது. இயந்திரத்தைச் சிறப்பாக இயங்கச் செய்வதற்கு அம்மா முதலில் செய்திருக்கக் கூடிய மிக முக்கிய நடவடிக்கை எது?
(1) புதிய தையல் ஊசியைப் பொருத்துதல்.
(2) மிருதுவான நைலோன் கயிற்றினால் சில்லுகளை இணைத்தல்.
(3) இயந்திரத்தின் சுழலுமிடங்களில் எண்ணெய் இடல்.

59. 
பிராணிகளிடம் இருந்து பயிர்களைப் பாதுகாக்கப் பயன்படுத்தப்படும் இவ்வுபகரணம் யாது?
(1) காற்றுக் கிலுக்கி
(2) நீர்ப்பிசாசு
(3) காற்றுச் சுழலி

60. "வானில், வானவில்லைக் கண்டு இரசித்தேன்" என்பதைத் தலைப்பாகக் கொண்டு **மூன்று** வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1) .....
.....

2) .....
.....

3) .....
.....

* * *

www.ikeou.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

முன்னோடி வினாத்தாள் 3

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2022

வினாத்தாள் I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	


	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க



LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
zoom
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

● 1, 2 ஆகிய வினாக்களில் வேறுபாடு உள்ள உருவைத் தெரிவு செய்க.


1.



(1)




(2)




(3)


2.



(1)




(2)




(3)

● 3, 4 ஆகிய வினாக்களில் ஒவ்வொன்றிலும் உள்ள நான்கு உருக்களில் மூன்றை ஒரு கூட்டமாக ஆக்கலாம். அக்கூட்டத்திற்குள் **அடங்காத** உருவைத் தெரிவு செய்க.


3.




A



B




C




D

(1) D (2) B (3) C


4.




A



B




C



D

(1) B (2) C (3) D

5.



இந்த மரச் சதுரமுகியின் நிறை 10 g ஆகும். இதனைப் போல் இரண்டு மடங்கு நீளம், அகலம், உயரம் உடைய இதே வகை மரத்தாலான மரச்சதுரமுகியின் நிறை யாது?


(1) 20 g (2) 40 g (3) 80 g

6. ரேவதியிடம் இருந்த பணம், மாலதியிடம் இருந்த பணத்தின் இரண்டு மடங்கிலும் பார்க்க 30 ரூபாயினால் கூடியதாகும். அவர்கள் இருவரிடமும் இருந்த பணம் 270 ரூபாய் எனின், மாலதியிடம் இருந்த பணம் எவ்வளவு?


(1) 60 ரூபாய் (2) 70 ரூபாய் (3) 80 ரூபாய்

சுட்டெண்: .....

7. உரு B இலுள்ள வடிவத்தின் எத்தனை வெவ்வேறு அமைவுகள் உரு A இல் உள்ளன?



உரு A



உரு B

(1) 4 (2) 9 (3) 14

8. விருந்து ஒன்றில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் விருந்து முடிவின் போது தமக்கிடையே கைகுலுக்கிக் கொண்டனர். அங்கு இடம்பெற்ற கை குலுக்கல்களின் எண்ணிக்கை 66 எனின், விருந்தில் கலந்து கொண்டவர்கள் எத்தனை பேர்?

(1) 11 (2) 12 (3) 15

● 9, 10 ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்ட தகவல்களை விளங்கி வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

9. ⊙⊙⊙△ = 30kg
⊙⊙△ = 22 kg
△△⊙ = ...

(1) 18kg
(2) 20kg
(3) 25kg

10. □ + △ = 19
△ − □ = 5
□ + □ = ...


(1) 12
(2) 14
(3) 16

11. நான் 31 ரூபாயைக் கொடுத்து மூன்று கொய்யாப்பழங்களையும் இரண்டு வாழைப்பழங்களையும் வாங்கினேன். வாழைப்பழம் ஒன்றின் விலை கொய்யாப் பழம் ஒன்றின் விலையிலும் 3 ரூபாய் அதிகமாகும் எனின், கொய்யாப்பழம் ஒன்றின் விலை யாது?

(1) 8 ரூபாய் (2) 6 ரூபாய் (3) 5 ரூபாய்

12. மாலாவிடம் இரண்டு ரூபாய் நாணயங்களாகவும் ஐந்து ரூபாய் நாணயங்களாகவும் 33 ரூபாய் உள்ளது. அதில் இருக்கத்தக்க ஐந்து ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கை யாது?

(1) 2 (2) 4 (3) 5

13. 

உருவில் ஒரு சதுர மரக்குற்றி காணப்படுகிறது. அது மேற்பரப்பில் மை பூசப்பட்டு, கோடுகள் வழியே சிறிய மரக்குற்றிகளாக வெட்டி வேறாக்கப்படுகிறது. எந்த ஒரு பக்கத்திலும் மை பூசப்படாத சிறிய மரக்குற்றிகளின் எண்ணிக்கை யாது?


(1) 1 (2) 2 (3) 3

www.lkedu.lk

14. வரிசையொன்றில் ஐந்தாவது ஆளாக குகனும், குகனில் இருந்து ஐந்தாவது ஆளாக சுமனும், சுமனுக்குப் பின்னால் மூன்று பேரும் நிற்கின்றனர். வரிசையில் நிற்பவர்களின் எண்ணிக்கை யாது?

(1) 13 (2) 12 (3) 11


15. கீழே A, B, C, D எனும் நான்கு பொருள்கள் தரப்பட்டுள்ளன.



பொருள் D இனது நிறை பொருள் B இனது நிறையின் மூன்று மடங்காகவும் அந்நான்கு பொருள்களினதும் மொத்த நிறை 1 kg ஆகவும் உள்ளது எனின், பொருள்கள் B, D ஆகியவற்றின் நிறைகள் முறையே யாவை?

(1) 100 g, 300 g (2) 200 g, 600 g (3) 150 g, 450 g

16. கீழே தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.



17. கீழே தரப்பட்டுள்ள எண்களின் ஒரு கோலம் உண்டாவதற்கு நீக்கப்பட வேண்டிய எண் எது?

400, 300, 200, 100, 50, 25

(1) 50 (2) 25 (3) 300

18. $\square \times \bigcirc = 72$ உம் $\square - \bigcirc = 6$ உம் ஆகும் எனின், $\square \div \bigcirc$ இன் பெறுமானம் யாது?

(1) 2 (2) 3 (3) 4

19. இரு வெற்றுக் கட்டங்களுக்கும் பொருத்தமான இரு கணிதச் செய்கைகளையும் முறையே தெரிவு செய்க.


275 $\square$ 25 = 50 $\square$ 5

(1) −, + (2) +, ÷ (3) −, ×

20. 100 தொடக்கம் 112 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 1, இலக்கம் 0 ஆகியவற்றை எழுதவேண்டிய தடவைகளின் எண்ணிக்கைகளை முறையே காட்டும் விடை எது?

(1) 17, 12 (2) 18, 11 (3) 18, 12

www.ikedu.lk


21. 

சில சிறிய சதுரமுகிகளைப் பயன்படுத்தி ஆக்கப்பட்டுள்ள இப்பொருளை ஒரு பெரிய சதுரமுகியாகப் பூரணப்படுத்துவதற்கு மேலும் எத்தனை சிறிய சதுரமுகிகள் தேவை?

(1) 5 (2) 6 (3) 7

22. ஒரு பேருந்தில் உள்ள ஆண் பயணிகளின் எண்ணிக்கையை விட பெண் பயணிகளின் எண்ணிக்கை 8 அதிகமானதாகும். அடுத்த தரிப்பிடத்தில் 4 ஆண்கள் பேருந்தில் ஏற, 5 பெண்கள் பேருந்தில் இருந்து இறங்கினர். இப்போது பேருந்தில் உள்ள ஆண் பயணிகளின் எண்ணிக்கை பெண் பயணிகளின் எண்ணிக்கையிலும்,

(1) ஒன்றினால் கூடியது (2) மூன்றினால் கூடியது (3) ஒன்றினால் குறைந்தது

23. 

உருவில் காணத்தக்க செவ்வகங்களின் எண்ணிக்கை,

(1) 8 (2) 11 (3) 12

24. கோலத்தில் அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்க.




.....




(1) (2) (3)

25. ஒரு தாள் X ஆனது ①, ② ஆகிய புள்ளிக் கோடுகள் வழியே மடிக்கப்பட்டு அதில் இரண்டு துளைகள் இடப்பட்டுள்ள முறையை உரு Y காட்டுகிறது. தாளை விரித்துப் பார்க்கும் போது காணக் கிடைக்கும் உரு யாது?



X Y



(1) (2) (3)

26. குறித்தவொரு புகைப்படமொன்றில் உள்ள ஒரு நபரைக் காட்டி மேனகா என்பவர் இவ்வாறு கூறினார். "அவர் எனது தந்தையின் தந்தைக்கு உள்ள ஒரே ஒரு மகனினது மகனாவார்" அவ்வாறெனின், அந்தப் புகைப்படத்திலே உள்ள நபருக்கு மேனகா மீதுள்ள உறவுமுறை யாது?

(1) தந்தை (2) சகோதரன் (3) மாமா

www.ikedu.lk

27. நான்கு வருடங்களுக்கு முன்னர் அமுதாவின் வயது அவளின் தற்போதைய வயதின் $\frac{1}{3}$ ஆகும். அமுதாவின் தற்போதைய வயது யாது?

(1) 12 வருடங்கள் (2) 9 வருடங்கள் (3) 6 வருடங்கள்

28. பிரசன்னா ஆண் பிள்ளையாவார். அவரின் அம்மாவுக்கு இரண்டு மகன்மாரும் ஒரு மகளும் உள்ளனர். இதன்படி கூறக்கூடிய பின்வரும் கூற்றுக்களில் **பிழையானது**, எது?

(1) பிரசன்னாவின் சகோதரிக்கு இரு சகோதரர்கள் உள்ளனர்.

(2) பிரசன்னாவிற்கு இரண்டு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் உள்ளனர்.

(3) பிரசன்னாவிற்கு ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் உள்ளனர்.

29. முதற் சொல்லில் இடம்பெறும் சில எழுத்துக்களைக் கொண்டு இரண்டாம் சொல் ஆக்கப்பட்டிருக்கும் சொற்சோடி எது?

(1) விடுதலை - தவிடு


(2) பருவதம் - தருமம்

(3) சாதகம் - சதம்


30. நான்கு பிள்ளைகளின் வயதுகளின் கூட்டுத்தொகை 26 வருடங்கள் ஆகும். மூன்று வருடங்களுக்கு முன்னர் இவர்களின் மூன்று பேரின் வயதுகளின் கூட்டுத்தொகை 9 வருடங்கள் ஆகும். அவ்வாறெனில், நான்காவது பிள்ளையின் தற்போதைய வயது எத்தனை வருடங்கள்?

(1) 8 (2) 12 (3) 14


31. சமச்சீர் அச்சுக்கள் சரியாக வரையப்பட்டுள்ள உரு எது?



(1)




(2)



(3)

32. முகம் பார்க்கும் கண்ணாடிக்கு முன்னால் வைத்துப் பார்க்கும் போது மாற்றமின்றித் தெரியக் கூடிய எழுத்துக்கள் எவை?

(1) PE (2) SN (3) AH

33. 

முகம் பார்க்கும் கண்ணாடியில் கடிகாரம் தோன்றும் விதம் உருவில் காணப்படுகிறது. இக்கடிகாரத்தின் உண்மை நேரம் என்ன?

(1) மு.ப. 10.00

(2) மு.ப. 11.50

(3) பி.ப. 2.00

34. 16 பேர் நிற்கும் ஒரு வரிசையில் தனக்கு முன்னால் ஒருவரும் தனக்குப் பின்னால் ஒருவரும் நிற்கும் வகையில் அவ்வரிசையில் நிற்பவர்கள் எத்தனை பேர்?

(1) 14 (2) 15 (3) 16

www.lkedu.lk

35. 2022 ஆம் வருடம் 52 ஆம் நாள் எது?

(1) பெப்ரவரி - 19 (2) பெப்ரவரி - 21 (3) பெப்ரவரி - 22

36. 2020 தொடக்கம் 2024 வரையுள்ள வருடங்களின் பெப்ரவரி மாதத்தில் உள்ள நாட்களின் மொத்த எண்ணிக்கை யாது?


(1) 114 (2) 140 (3) 142

37. A, B ஆகியவற்றுக்குப் பொருத்தமான எண்கள் முறையே எவை?

5	2	1	8
1	3	A	9
3	1	2	6
9	B	8	

(1) 5, 6 (2) 6, 5 (3) 4, 7


38. ஒரு விரிக்கப்பட்ட சதுரமுகியின் உரு இங்கு காணப்படுகிறது. இதனை ஒரு சதுரமுகியாக மறுபடியும் தயார் செய்யும் போது எதிர்முகங்களில் இருக்கக்கூடிய இரு உருக்களை சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.



(1) ✿ உம் ○

(2) △ உம் □

(3) ◇ உம் □

39. 

இந்தக் கூட்டற் செய்கையின் விடையாக இருக்கக்கூடியது யாது?

(1) 43 (2) 45 (3) 84

40. ஒரு மே மாதத்தின் ஐந்தாம் நாள் வியாழக்கிழமை எனின்,

(1) அம்மாதத்தின் கடைசி நாள் திங்கட்கிழமையாக இருக்கும்.

(2) அம்மாதத்தின் 21 ஆம் 28 ஆம் திகதிகள் ஞாயிற்றுக்கிழமையாக இருக்கும்.

(3) அம்மாதத்தில் ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை ஆகிய நாட்கள் ஐந்து வீதம் இருக்கும்.

* * *

www.ikeou.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம். ஏ. அபுதாஹிர்

முன்னோடி வினாத்தாள் 3

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2022

வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதுக.
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

காலைக் கதிரவன் கிழக்கு வானில் உதித்து எழுந்தது. பறவைகள் இன்னிசை கீதம் இசைத்தபடி வானில் பறந்து சென்றன. தாவர இலைகளில் படிந்திருந்த முத்துக்கள் போன்ற பனித்துளிகள் மறையத் தொடங்கின. மெல்லிய குளிர் காற்று மேனியைச் சில்லிட வைத்தது. செடிகளில் பூத்திருந்த மலர்களின் மணம் மூக்கைப் பறித்தது. வளைந்துநெளிந்து செல்லும் நீரோடை, கதிரவனின் பொன்னொளி பட்டதனால் பளபளத்தது.

- பந்தியைத் துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) இன்னிசை கீதம் இசைத்தபடி சென்றவை எவை? : .....

(ii) மேனியைச் சில்லிட வைத்தது எது? : .....

(iii) நீரோடை பளபளத்தது எதனால்? : .....

(iv) 'வாசம்' என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக. : .....

(v) பந்தியில் இடம்பெறும் இணைமொழியை எழுதுக. : .....

(vi) இங்கு முத்துக்களுக்கு ஒப்பாகக் கூறப்படுபவை எவை? : .....

2. அ.்றிணை இறந்தகால பன்மை வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) பறக்கின்றன (2) ஓடியது (3) குடித்தன

3. தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) எல்லோரும் வீட்டு ..... (முற்றத்தில் / முட்றத்தில்) வந்து அமர்ந்தார்கள்.

(ii) தத்தம் பணியிடங்களை நோக்கி ..... (ஊளியர்கள் / ஊழியர்கள்) விரைகின்றனர்.

4. பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியாக்கி நிகழ்கால வினைச் சொல் சேர்த்து மீண்டும் எழுதுக.

(i) மோகன், பரீட்சை வினாக்களுக்குப் பதட்டமின்றிப் பதிலளித்தான்.

.....

(ii) நான் இளனி குடித்தேன்.

.....

5. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறிகளை இடுக.

எவ்வளவு பெரிய சிலை

6. பின்வரும் ஒவ்வொரு மரபுத்தொடரும் வெளிப்படுத்தும் கருத்தை கட்டத்திற்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

(i) தட்டிக் கொடுத்தல் : .....

(ii) தலை கவிழ்தல் : .....

ஆசைப்படுதல் / வெட்கமடைதல் / உற்சாகப்படுத்துதல் / துன்பத்திலிருந்து காப்பாற்றுதல்

www.ikedu.lk

சுட்டெண்: .....

7. (i) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

போதும் என்ற ..... பொன் செய்யும் மருந்து

(ii) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

ஒரு பொருளின் சிறப்பு அது இல்லாத போதுதான் தெரியும்

.....

8. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் '✓' எனவும் பிழையாயின் '✗' எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறியினுள் அடையாளமிடுக.

(i) மரம் முழுவதும் மஞ்சள் நிறப் பூக்கள் காணப்பட்டன. (.....)

(ii) அரசர், படைத்தளபதிகளுடன் ஆலோசனை புரிந்தார்கள். (.....)

(iii) யானைக் கூட்டம் பயிர்களை அழித்தன. (.....)

(iv) பூக்களின் மணம் எங்கும் பரவியது. (.....)

9. பின்வரும் சொற்றொடர் குறிக்கும் தனிச் சொல்லை எழுதுக.

தேர்தல் ஒன்றின் போட்டியிடுபவர் : .....

10. வெற்றிடத்துக்குப் பொருத்தமான மரபுச் சொல்லை எழுதுக.

வாழைக்கு இலை போல பனைக்கு ..... ஆகும்.

11. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக.

(i) Classroom : ..... (ii) String hoppers : .....

12. ஒவ்வொரு படத்துக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை **ஆங்கில** எழுத்துக்களிலேயே எழுதுக.

(i) 

.....

(ii) 

.....

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) like / books / story / I : .....

(ii) the / is / table / It / on : .....


14. 'சந்துதா' என்ற சிங்களச் சொல்லுக்குரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக.

: .....

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் **தமிழில்** எழுதுக.

உள்ளே வாருங்கள் : .....

www.ikedu.lk


16. 

(i) இந்த எண்சட்டத்தில் வகைகுறிக்கப்படும் எண்ணை இலக்கங்களில் எழுதுக.

: .....

(ii) இந்த எண்சட்டத்தில் வகைகுறிக்கப்படும் எண்ணின் எண்பெயரை எழுதுக.

: .....

17. 

வட்டத்தினுள் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகச் சிறிய எண்ணை எழுதுக.

: .....

18. எண்கோலத்திற்கேற்ப வெற்றிடங்களில் இடம்பெற வேண்டிய எண்களை எழுதுக.

....., 54, 60, 66, ..., 78

19. 36 கொய்யாப் பழங்களின் $\frac{3}{4}$ இல் எத்தனை கொய்யாப் பழங்கள் உண்டு?

: .....

20. இரண்டு பாடசாலைகளின் மாணவர் எண்ணிக்கை பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

பாடசாலை	மாணவர்களின் எண்ணிக்கை	
	ஆண்	பெண்
சரஸ்வதி வித்தியாலயம்	1016	1269
சாகிரா வித்தியாலயம்	855	1368

(i) சரஸ்வதி வித்தியாலய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?


: .....

(ii) சரஸ்வதி வித்தியாலயத்தின் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் சாகிரா வித்தியாலயத்தின் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் இடையேயுள்ள வித்தியாசம் யாது?

: .....

21. ஒரு தொகைப் புத்தகங்களை நான்கு பாடசாலைகளுக்கிடையே சமனாகப் பங்கிட்ட போது ஒரு பாடசாலைக்கு 360 புத்தகங்கள் கிடைத்தன. பங்கிடப்பட்ட புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

22. 

வட்டத்தினுள் உள்ள எண்களுள் 2 இனாலும் 5 இனாலும் மீதியின்றி வகுபடக்கூடிய எண்கள் இரண்டும் எவை?

: ....., ...

23. கொழும்பிலிருந்து கதிர்காமத்திற்குச் செல்லும் ஒரு பேருந்து தேநீருக்காக நிறுத்தப்படும் போது 85km 500m ஐப் பயணித்திருந்தது. அது செல்ல வேண்டிய மொத்தத் தூரம் 278km ஆயின், பயணத்தை நிறைவு செய்ய மேலும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும்?

: .....km .....m

www.ikdu.lk

24. பிற்பகல் 9.45 என்பது இருபத்து நான்கு மணிக் கடிகாரத்தில் காட்டப்படும் விதத்தை இலக்கத்தில் எழுதுக.


: .....

25. ஒரு வாகனத்தில் முதலாம் நாள் $5l\ 500ml$ எரிபொருளும் இரண்டாம் நாள் $3l\ 750ml$ எரிபொருளும் நிரப்பப்பட்டன. இரண்டு தினங்களிலும் நிரப்பப்பட்ட எரிபொருளின் மொத்த அளவு யாது?

: .....*l* .....*ml*

26. ஒரு வியாபாரி 58kg 700g நிறையுள்ள வத்தாளைக் கிழங்குக் குவியலில் இருந்து 36kg 800g வத்தாளைக் கிழங்கை விற்பனை செய்தார். எஞ்சிய வத்தாளைக் கிழங்கின் நிறை யாது?

: .....kg .....g

27. 

உருவில் உள்ள உருளையில் இருக்கும்,

(i) முகங்கள் எத்தனை? : .....

(ii) வளைந்த விளிம்புகள் எத்தனை? : .....

28. ஓர் அன்னாசிப் பழத்தின் விலை 280 ரூபாய் ஆகும். இரண்டு அன்னாசிப் பழங்களை விலைக்கு வாங்கிய கோமளா, கடைக்காரரிடம் ஓர் 500 ரூபாய்த் தாளையும் ஒரு 100 ரூபாய்த் தாளையும் கொடுத்தாள். கோமளாவுக்குக் கிடைக்க வேண்டிய மீதிப் பணம் எவ்வளவு?

: ..... ரூபாய்


29. ஒரு மணித்தியாலத்தில் சிற்றுண்டிச்சாலை ஒன்றில் விற்பனை செய்யப்பட்டுள்ள இனிப்புப் பண்டங்களின் விவரம் வரைபில் காட்டப்பட்டுள்ளது.

(i) விற்கப்பட்ட எந்த இரண்டு இனிப்புப் பண்டங்களின் மொத்த எண்ணிக்கை விற்கப்பட்ட லட்டுகளின் எண்ணிக்கைக்குச் சமனாகும்?

: ....., ...

(ii) கேசரியின் எண்ணிக்கையை விடக் கூடுதலாக எவ்வளவு எள்ளுருண்டைகள் விற்கப்பட்டுள்ளன?

: .....



- 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30. இலங்கை மக்களால் சுதந்திர தினம் கொண்டாடப்படுவது,
(1) ஏப்ரல் 13 ஆந் திகதி (2) பெப்ரவரி 04 ஆந் திகதி (3) மே 01 ஆந் திகதி

31. ஒரு குறித்த காலத்தில் அன்றி வருடம் முழுவதும் பூக்கள் பூக்கும் தாவரங்கள் இரண்டு,
(1) ரம்புட்டான், மா (2) வேம்பு, வாகை (3) தென்னை, வாழை

www.ikdu.lk

32. பன்சல, கோயில் ஆகிய சமயத் தலங்களுடன் தொடர்புபட்ட பண்டிகைகளை முறையே காட்டும் விடையைத் தெரிவு செய்க.
(1) வெசாக், நவராத்திரி (2) எசல, நத்தார் (3) மகாசிவராத்திரி, பாஸ்கு

33. தேசியக் கொடியின் உள்ளே உள்ள நான்கு அரச இலைகளால் குறிக்கப்படும் பணபுகளில் இரண்டு,
(1) இரக்கம், பற்றின்மை (2) திருப்தி, கூட்டுறவு (3) பொறுமை, பற்றின்மை

34. ஒளடத பானம் தயாரிக்கப் பயன்படும் பூக்கள்,
(1) பொன்னாவரை, வில்வம் (2) அகத்தி, சாத்தாவாரி
(3) கறிவேப்பிலை, செவ்வரத்தை

35. குறித்த வேளையில் உணவை உண்ணாமல் இருப்பதால் ஏற்படத்தக்க ஒரு நோய்,
(1) நீரிழிவு (2) உயர்குருதி அமுக்கம் (3) இரைப்பையழற்சி

36. உடல் வளர்ச்சிக்கு உதவும் உணவுகள்,
(1) பலாக்காய், சோறு (2) தோடை, அன்னாசி (3) பருப்பு, பாசிப்பயறு

37. வீட்டில் உள்ளோர் பொதுவில் பயன்படுத்தும் ஒரு பொருள்,
(1) கதிரை (2) தலையணை (3) பற்றூரிகை

38. உறுதியற்ற சதுப்பு நிலச் சூழலில் வளரும் கண்டல் தாவரங்கள் அசைவின்றி, தம்மை நிலைப்படுத்துவதற்கு அவை கொண்டுள்ள விஷேட வேர்க் கட்டமைப்பு எது?
(1) தொங்கு வேர் (2) மிண்டி வேர் (3) மூச்சு வேர்

39. குப்பைகளை உக்கச் செய்து பசளையாக மாற்ற உதவும் பிராணிகள்,
(1) தேனீ, வீட்டு ஈ (2) சிலந்தி, தேனீ (3) மண்புழு, கறையான்

40. நாட்டின் நற்பெயரைக் கட்டி எழுப்புவதில் பங்களிப்புச் செய்த இலங்கையின் சிங்கள மொழிப் பாடகரும் இசையமைப்பாளருமாகத் திகழ்ந்தவர்,
(1) பண்டிதர் அமரதேவ (2) ஆதர் சீ. கிளாக் (3) அநகாரிகதர்மபால

41. அசுத்த நீரைப் பருகுவதால் ஏற்படக்கூடிய நோய்கள் **மாத்திரம்** அடங்கும் விடை,
(1) வாந்திபேதி, மலேரியா, நீர்வெறுப்பு
(2) நீர்வெறுப்பு, யானைக்கால், மலேரியா
(3) நெருப்புக்காய்ச்சல், வாந்திபேதி, மஞ்சட்காமாலை

42. 'மள்புளுட்டா' எனப்படுவது இலங்கைக்கே உரித்தான ஒரு,
(1) நகருயிர் (2) முலையூட்டி (3) மீனினம்

43. ஆமை, நத்தை ஆகிய பிராணிகள் பாதுகாப்பிற்காக,
(1) நிறம் மாறும் திறன் கொண்டவை
(2) ஓட்டினுள் ஒளிந்து கொள்ளும் திறன் கொண்டவை
(3) உடலை வட்டமாகச் சுருட்டிக் கொள்ளும் திறன் கொண்டவை

44. நீர்ப் பாத்திரம் ஒன்றில் தளவாடியை வைத்து வெண்ணிறமான திரையொன்றில் சூரிய ஒளியைப் படச் செய்த போது, திரையில் தோன்றிய சூரிய ஒளியில் உள்ள நிறங்களில் இரண்டு,
(1) கறுப்பு, வெள்ளை (2) ஊதா, சிவப்பு (3) கபிலம், கறுப்பு

www.ikedu.lk

45. ஒரு நாட்டுக்கே உரித்தான தாவரங்கள் **மாத்திரம்** அடங்கியுள்ள விடை,
(1) ஆனைக்கொய்யா, ரம்புட்டான், எண்ணை
(2) கொடபறை, மா, ரம்புட்டான்
(3) கெக்கட்டியா, கொடபறை, எண்ணை

46. அனைத்துமுண்ணி, இலையுண்ணி என்பவற்றுக்கு உதாரணமாக அமையும் பிராணிகளை முறையே காட்டும் விடை எது?
(1) நாய், மான் (2) முயல், தும்பி (3) தும்பி, கோழி

47. 

இக்குறியீட்டினால் கூறப்படும் தகவல் யாது?
(1) மீள் சுழற்சிக்கு உட்படுத்தலாம்.
(2) மீள் சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய கண்ணாடி.
(3) மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய அலுமினியம்.

48. நுளம்புகள் எமக்கு அருகில் வருவதைத் தவிர்ப்பதற்காக உடம்பில் பூசுவதற்குப் பொருத்தமான எண்ணெய்
(1) நல்லெண்ணெய் (2) தேங்காயெண்ணெய் (3) காவட்டம்புல் எண்ணெய்

49. இலவசக் கல்வியின் தந்தை எனப் போற்றப்படுபவர்
(1) அநகாரிக தர்மபால (2) வண.எஸ். மஹிந்த (3) கலாநிதி.CWW.கன்னங்கர

50. ஊசித் துளைக் கமராவைச் செய்யும் போது, அதனைச் செய்யப் பயன்படுத்துகின்ற பின்வரும் எப்பொருளின் சரிமத்தியில் துளையொன்று இடப்படுகிறது?
(1) அட்டைப் பெட்டியின் மேற்பக்கத்தில்.
(2) கறுப்பு நிறத் தாளில்.
(3) ரிசுத்தாளில்.


51. நீலம் சிவப்பு ஆகிய நிறங்களைக் கலப்பதால் பெறப்படும் நிறம்
(1) ஊதா (2) கபிலம் (3) செம்மஞ்சள்


52. வெந்நீர் கேத்தல் புரண்டதால் எரிகாயத்துக்கு உள்ளான ஒருவருக்கு முதலில் செய்ய வேண்டியது யாது?
(1) காயம் ஏற்பட்ட இடத்தில், களிம்புகளைப் பூசுதல்.
(2) காயம் ஏற்பட்ட இடத்தில் ஒட்டியுள்ள பிறபொருட்களை அகற்றுதல்.
(3) காயம் ஏற்பட்ட இடத்தில், வழிந்து செல்லுமாறு தண்ணீரை ஊற்றுதல்.


53. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கிய மாகாணம் எது?
(1) சப்ரகமுவ மாகாணம் (2) மத்திய மாகாணம் (3) கிழக்கு மாகாணம்

54. சீகிரியாக் குன்றில் ஓவியங்களைத் தீட்டுவித்த மன்னன்,
(1) காசியப்பன் (2) துட்டகைமுனு (3) தாதுசேனன்

55. உப்புக் கரைத்த நீர் உள்ள கண்ணாடிக் குவளையினுள் புதிய முட்டை ஒன்றை இட்டால் அது காணப்படும் விதத்தைக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.


(1)


(2)


(3)

56. 'சுவசெரிய' அவசர அம்பியுலன்ஸ் வண்டிச் சேவையைப் பெறுவதற்கு அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்,

(1) 1920 (2) 1988 (3) 1990


57. இலங்கைக்கே உரித்தான பிராணிகள் எனப்படுபவை,


(1) இலங்கையில் காணப்படும் பிராணிகளாகும்.


(2) இலங்கையில் அதிக அளவில் காணப்படும் பிராணிகளாகும்.


(3) இலங்கையிலேயே தோற்றம் பெற்ற பிராணிகளாகும்.

58. உலர் கலங்களுடன் மின்குமிழ்கள் கம்பிகளினால் இணைக்கப்பட்டுள்ள மூன்று சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் மின்குமிழ் / மின்குமிழ்கள் **ஒளிராத** சந்தர்ப்பம் எது?


(1)


(2)


(3)

59. 

இந்தத் தையல் முறைக்கு வழங்கப்படும் பெயர் யாது?

(1) கம்பளித் தையல்

(2) சங்கிலித் தையல்

(3) விஸ்பம் தையல்

60. **"உயிர்கள் மீது அன்பு காட்டுவோம்"** என்பதைத் தலைப்பாகக் கொண்டு **மூன்று** வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் **ஐந்து** சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1) .....

.....

2) .....

.....

3) .....

.....

* * *

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

பக்கம் 2

Q - First முன்னோடி வினாத்தாள் - 2022 தரம் - 5

முன்னோடி வினாத்தாள் 1 - I

1. (2)	2. (3)	3. (3)	4. (1)	5. (1)	6. (3)	7. (3)
8. (1)	9. (1)	10. (2)	11. (2)	12. (3)	13. (3)	14. (2)
15. (3)	16. (3)	17. (2)	18. (2)	19. (3)	20. (3)	21. (2)
22. (2)	23. (3)	24. (2)	25. (3)	26. (1)	27. (3)	28. (3)
29. (3)	30. (2)	31. (1)	32. (2)	33. (3)	34. (3)	35. (3)
36. (1)	37. (3)	38. (3)	39. (2)	40. (2)		

முன்னோடி வினாத்தாள் 1 - II

1.	(i)	அமைதியாக	*(1 புள்ளி)*
	(ii)	ஆற்றின் இரு மருங்கிலும்	*(1 புள்ளி)*
	(iii)	மரங்களில் தாவித் திரிந்தது	*(1 புள்ளி)*
	(iv)	வெள்ளை	*(1 புள்ளி)*
	(v)	வானளாவ	*(1 புள்ளி)*
	(vi)	கட்டுமரத்தில்	*(1 புள்ளி)*
2.		இயற்கை எழில் கொஞ்சும் நகரமே கண்டி மாநகரமாகும்.	*(2 புள்ளிகள்)*
3.	(i)	நான் பிட்டும் கறியும் சாப்பிட்டேன்	*(1 புள்ளி)*
	(ii)	அவன் கோடரியால் மரத்தை வெட்டினான்	*(1 புள்ளி)*
4.	(i)	ஆபத்து வேளையில் கைவிடல் / ஆபத்தில் கைவிடல்	*(1 புள்ளி)*
	(ii)	உற்சாகப்படுத்தினார்	*(1 புள்ளி)*
5.	(i)	வண்ணத்துப் பூச்சிகளின் பிரதான உணவு அமுதம் ஆகும்.	*(1 புள்ளி)*
	(ii)	முற்கால மக்கள் குளங்களை அண்டியே தமது குடியிருப்புக்களை அமைத்தனர்.	*(1 புள்ளி)*
6.	(i)	"நீ இங்கே வா" என்று ஆசிரியர் அழைத்தார்.	*(1 புள்ளி)*
	(ii)	நீங்கள் காலையுணவை உண்டீர்களா?	*(1 புள்ளி)*
7.	(i)	பெற்றது	*(1 புள்ளி)*
	(ii)	கட்டின	*(1 புள்ளி)*
	(iii)	ஓடியது	*(1 புள்ளி)*
8.		ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்	*(1 புள்ளி)*
9.		தங்கை ஓவியம் வரைகிறாள்	*(1 புள்ளி)*
10.		சிறுமை	*(1 புள்ளி)*
11.	(i)	மேகங்கள்	*(1 புள்ளி)*
	(ii)	தேசிய கீதம்	*(1 புள்ளி)*
12.	(i)	SNAIL / Snail / snail	*(1 புள்ளி)*
	(ii)	TOOTHBRUSH / Toothbrush / toothbrush	*(1 புள்ளி)*

www.1kedu.lk

13. (i) It is a fruit	*(1 புள்ளி)*
(ii) I live in Colombo	*(1 புள்ளி)*
14. *மாணவன்*	*(1 புள்ளி)*
15. *ஒபே பாசல குமக்த?*	*(1 புள்ளி)*
16. 53705	*(2 புள்ளிகள்)*
17. 900, 6	*(2 புள்ளிகள்)*
18. 12691, 12672, 12642	*(2 புள்ளிகள்)*
19. (i) 26	*(1 புள்ளி)*
(ii) 11	*(1 புள்ளி)*
20. (i) 735	*(2 புள்ளிகள்)*
(ii) 90	*(2 புள்ளிகள்)*
21. 504	*(2 புள்ளிகள்)*
22. 1, 80	*(2 புள்ளிகள்)*
23. 108	*(2 புள்ளிகள்)*
24. 210	*(2 புள்ளிகள்)*
25. 45	*(2 புள்ளிகள்)*
26. 8, 150	*(2 புள்ளிகள்)*
27. (i) 8 / *எட்டு*	*(1 புள்ளி)*
(ii) 12 / *பன்னிரண்டு*	*(1 புள்ளி)*
28. *சரியாகக் குறித்துக் காட்டியிருப்பின் புள்ளி வழங்குக.*	*(2 புள்ளிகள்)*
29. (i) *தோசை, கடலை*	*(2 புள்ளிகள்)*
(ii) 3 / *மூன்று*	*(2 புள்ளிகள்)*

30. (2)	31. (1)	32. (3)	33. (2)	34. (3)	35. (1)	36. (3)	37. (2)	38. (1)	39. (2)
40. (2)	41. (2)	42. (2)	43. (1)	44. (3)	45. (1)	46. (2)	47. (1)	48. (1)	49. (3)
50. (2)	51. (1)	52. (1)	53. (1)	54. (1)	55. (2)	56. (2)	57. (3)	58. (1)	59. (1)

(30 புள்ளிகள்)

60. *பொருத்தமான வாக்கியங்களுக்குப் புள்ளி வழங்குக. வாக்கியமொன்றில் ஒரு எழுத்துப் பிழை இருப்பின் அவ்வாக்கியத்திற்கு 1 புள்ளி மாத்திரம் வழங்குக. ஒன்றுக்கு மேற்பட்ட பிழைகள் இருப்பின் அவ்வாக்கியத்திற்குப் புள்ளி வழங்க வேண்டாம்.* *(6 புள்ளிகள்)*

முழுவிடைத்தாளையும் கருத்திற்கொண்டு தெளிவான எழுத்து, நேர்த்தி என்பவற்றிற்கு போனஸாக 2 புள்ளிகள்

www.lkedu.lk

Q - First முன்னோடி வினாத்தாள் - 2022 தரம் - 5



முன்னோடி வினாத்தாள் 2 - I

1. (3)	2. (3)	3. (1)	4. (2)	5. (1)	6. (3)	7. (1)
8. (2)	9. (3)	10. (1)	11. (1)	12. (2)	13. (3)	14. (2)
15. (3)	16. (2)	17. (1)	18. (2)	19. (2)	20. (1)	21. (2)
22. (3)	23. (2)	24. (2)	25. (1)	26. (2)	27. (3)	28. (2)
29. (3)	30. (1)	31. (1)	32. (2)	33. (2)	34. (3)	35. (1)
36. (2)	37. (2)	38. (1)	39. (1)	40. (3)		

முன்னோடி வினாத்தாள் 2 - II

1.	(i)	பிறைச் சந்திரன்	(1 புள்ளி)
	(ii)	தொங்க விடப்பட்ட தங்கத் தகடுகளைப் போல / தங்கத் தகடுகளைப் போல	(1 புள்ளி)
	(iii)	சில கருமேகக் கூட்டங்கள் / கருமேகக் கூட்டங்கள்	(1 புள்ளி)
	(iv)	தொலைவு	(1 புள்ளி)
	(v)	அங்குமிங்கும்	(1 புள்ளி)
	(vi)	பொன் + ஒளி	(1 புள்ளி)
2.	(i)	உன்னதமான	(1 புள்ளி)
	(ii)	படையணி	(1 புள்ளி)
3.		ஆறு குளங்களில் உள்ள நீர் ஆவியாகி மீண்டும் மழையாகப் பெய்யும்	(1 புள்ளி)
4.	(i)	×	(1 புள்ளி)
	(ii)	✓	(1 புள்ளி)
	(iii)	✓	(1 புள்ளி)
	(iv)	×	(1 புள்ளி)
5.		"கல்விக்கு அழகு கசடற மொழிதல்" என்றனர் எம் முன்னோர்கள்.	(1 புள்ளி)
6.	(i)	அந்தப்புரம்	(1 புள்ளி)
	(ii)	தீர்க்கதரிசி	(1 புள்ளி)
7.	(i)	சிறக்கப் போ	(1 புள்ளி)
	(ii)	அடிமேல் அடிஅடித்தால் அம்மியும் நகரும்	(1 புள்ளி)
8.		அவள் இனிமையாகப் பாடுகின்றாள் / பாடுகிறாள்	(1 புள்ளி)
9.		உழத்தி	(1 புள்ளி)
10.	(i)	கைம்மாறு	(1 புள்ளி)
	(ii)	தலையணை	(1 புள்ளி)
11.	(i)	பால்	(1 புள்ளி)
	(ii)	செய்தித்தாள்	(1 புள்ளி)
12.	(i)	Monkey	(1 புள்ளி)
	(ii)	Hammer	(1 புள்ளி)

www.lkedu.lk

13. (i) I have a red beak (1 புள்ளி)
(ii) I walk to school (1 புள்ளி)

14. அதிபர் (1 புள்ளி)

15. மெஹேட்ட என்ன (1 புள்ளி)

16. மூவாயிரத்து எழுநூற்று ஒன்பது (2 புள்ளிகள்)

17. (i) நூறினிடம் (1 புள்ளி)
(ii) 40 / நாற்பது (1 புள்ளி)

18. மு.ப. 1.30 (2 புள்ளிகள்)

19. 8 / எட்டு (2 புள்ளிகள்)

20. 12, 100 (2 புள்ளிகள்)

21. 3, 20 (2 புள்ளிகள்)

22. 25, 800 (2 புள்ளிகள்)

23. 3, 45 (2 புள்ளிகள்)

24. (i) A, C (1 புள்ளி)
(ii) D (1 புள்ளி)

25. (i) 510.00 (2 புள்ளிகள்)
(ii) 680.00 (2 புள்ளிகள்)

26. 204 (2 புள்ளிகள்)

27. 5309, 5093, 3509 (2 புள்ளிகள்)

28. 1000 (2 புள்ளிகள்)

29. (i) கொய்யா (2 புள்ளிகள்)
(ii) 12 (2 புள்ளிகள்)

30. (3) 31. (1) 32. (2) 33. (2) 34. (2) 35. (3) 36. (2) 37. (1) 38. (3) 39. (3)
40. (3) 41. (3) 42. (1) 43. (2) 44. (2) 45. (3) 46. (3) 47. (1) 48. (3) 49. (1)
50. (3) 51. (3) 52. (3) 53. (1) 54. (2) 55. (3) 56. (3) 57. (2) 58. (3) 59. (1)

(30 புள்ளிகள்)

60. பொருத்தமான வாக்கியங்களுக்குப் புள்ளி வழங்குக. வாக்கியமொன்றில் ஒரு எழுத்துப் பிழை இருப்பின் அவ்வாக்கியத்திற்கு 1 புள்ளி மாத்திரம் வழங்குக. ஒன்றுக்கு மேற்பட்ட பிழைகள் இருப்பின் அவ்வாக்கியத்திற்குப் புள்ளி வழங்க வேண்டாம். (6 புள்ளிகள்)

முழுவிடைத்தாளையும் கருத்திற்கொண்டு தெளிவான எழுத்து, நேர்த்தி என்பவற்றிற்கு போனஸாக 2 புள்ளிகள்

www.lkedu.lk

Q - First முன்னோடி வினாத்தாள் - 2022 தரம் - 5

முன்னோடி வினாத்தாள் 3 - I

1. (1)	2. (3)	3. (2)	4. (2)	5. (3)	6. (3)	7. (2).
8. (2)	9. (2)	10. (2)	11. (3)	12. (3)	13. (1)	14. (2)
15. (3)	16. (1)	17. (3)	18. (1)	19. (3)	20. (3)	21. (3)
22. (1)	23. (2)	24. (3)	25. (1)	26. (2)	27. (3)	28. (2)
29. (1)	30. (1)	31. (3)	32. (3)	33. (3)	34. (1)	35. (2)
36. (3)	37. (1)	38. (2)	39. (3)	40. (3)		

முன்னோடி வினாத்தாள் 3 - II

1.	(i)	பறவைகள்	*(1 புள்ளி)*
	(ii)	மெல்லிய குளிர்காற்று / குளிர்காற்று	*(1 புள்ளி)*
	(iii)	கதிரவனின் பொன்னொளி பட்டதனால்	*(1 புள்ளி)*
	(iv)	மணம்	*(1 புள்ளி)*
	(v)	வளைந்து நெளிந்து	*(1 புள்ளி)*
	(vi)	பனித்துளிகள்	*(1 புள்ளி)*
2.	(3)		*(1 புள்ளி)*
3.	(i)	முற்றத்தில்	*(1 புள்ளி)*
	(ii)	ஊழியர்கள்	*(1 புள்ளி)*
4.	(i)	மோகன், பரீட்சை வினாக்களுக்குப் பதற்றமின்றிப் பதிலளிக்கின்றான் / பதிலளிக்கிறான்.	*(1 புள்ளி)*
	(ii)	நான் இளநீர் குடிக்கின்றேன் / குடிக்கிறேன்.	*(1 புள்ளி)*
5.		எவ்வளவு பெரிய சிலை!	*(1 புள்ளி)*
6.	(i)	உற்சாகப்படுத்துதல்	*(1 புள்ளி)*
	(ii)	வெட்கமடைதல்	*(1 புள்ளி)*
7.	(i)	மனமே	*(1 புள்ளி)*
	(ii)	நிழலின் அருமை வெயிலிற் தெரியும்	*(1 புள்ளி)*
8.	(i)	✓	*(1 புள்ளி)*
	(ii)	×	*(1 புள்ளி)*
	(iii)	×	*(1 புள்ளி)*
	(iv)	✓	*(1 புள்ளி)*
9.		வேட்பாளர்	*(1 புள்ளி)*
10.		ஓலை	*(1 புள்ளி)*
11.	(i)	வகுப்பறை	*(1 புள்ளி)*
	(ii)	இடியப்பம்	*(1 புள்ளி)*
12.	(i)	WELL / Well / well	*(1 புள்ளி)*
	(ii)	PINEAPPLE / Pineapple / pineapple	*(1 புள்ளி)*

www.lkedu.lk

13. (i) I like story books *(1 புள்ளி)*
    (ii) It is on the table *(1 புள்ளி)*

14. திங்கட் கிழமை / திங்கள் *(1 புள்ளி)*

15. அத்துலட்ட என்ன *(1 புள்ளி)*

16. (i) 2040 *(1 புள்ளி)*
    (ii) இரண்டாயிரத்து நாற்பது *(2 புள்ளிகள்)*

17. 10456 *(2 புள்ளிகள்)*

18. 48, 72 *(2 புள்ளிகள்)*

19. 27 *(2 புள்ளிகள்)*

20. (i) 2285 *(2 புள்ளிகள்)*
    (ii) 99 *(2 புள்ளிகள்)*

21. 1440 *(2 புள்ளிகள்)*

22. 20, 70 *(2 புள்ளிகள்)*

23. 192, 500 *(2 புள்ளிகள்)*

24. 21:45 *(2 புள்ளிகள்)*

25. 9,250 *(2 புள்ளிகள்)*

26. 21,900 *(2 புள்ளிகள்)*

27. (i) 2 / இரண்டு *(1 புள்ளி)*
    (ii) 2 / இரண்டு *(1 புள்ளி)*

28. 40 *(2 புள்ளிகள்)*

29. (i) தேன்குழல், பொரி விளாங்காய் *(2 புள்ளிகள்)*
    (ii) 6 / ஆறு *(2 புள்ளிகள்)*

30. (2)	31. (3)	32. (1)	33. (1)	34. (1)	35. (3)	36. (1)	37. (1)	38. (2)	39. (3)
40. (1)	41. (3)	42. (3)	43. (2)	44. (2)	45. (3)	46. (1)	47. (3)	48. (3)	49. (3)
50. (2)	51. (1)	52. (3)	53. (3)	54. (1)	55. (3)	56. (3)	57. (3)	58. (1)	59. (1)

(30 புள்ளிகள்)

60. பொருத்தமான வாக்கியங்களுக்குப் புள்ளி வழங்குக. வாக்கியமொன்றில் ஒரு எழுத்துப் பிழை இருப்பின் அவ்வாக்கியத்திற்கு 1 புள்ளி மாத்திரம் வழங்குக. ஒன்றுக்கு மேற்பட்ட பிழைகள் இருப்பின் அவ்வாக்கியத்திற்குப் புள்ளி வழங்க வேண்டாம். *(6 புள்ளிகள்)*

முழுவிடைத்தாளையும் கருத்திற்கொண்டு தெளிவான எழுத்து, நேர்த்தி என்பவற்றிற்கு போனஸாக 1 புள்ளி

www.lkedu.lk